ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)

தொகுதி	நள௵ புரட்டாசி௴ 1௳	பகுதி.
2	1916-ம்௵ செப்டம்பர்௴ 16௳	3

கடவுள் வணக்கம்

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
தன்மைநாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின்
றியக்கஞ்செய்யும்
சோதியை மாத்தூவெளியை மனதவிழ நிறைவான
துரியவாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தைசெய்வாம்.

அகரவுயி ரெழுத்தனைத்து மாகிவேறா
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்துமாகிப்
பகர்வன வெல்லாமாகி யல்லவாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மையாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்களெல்லாந்
தோயாத வறிவாகிச் சுத்தமாகி
நிகரில்பசு பதியான பொருளைநாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம்.

கண்ணு ணின்ற வொளியைக் கருத்தினை
விண்ணு ணின்று விளங்கிய மெய்யினை
யெண்ணி யெண்ணி யிரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்றொழுந் தெய்வமே.

ஆனந்தபோதினி

௱௯௱௩ புரட்டாசிமீ 1௨

ஆறுவது சினம்

மேற்கூறப்பட்ட நமது ஔவை பிராட்டியாருடைய வாக்கியம் ஏறக்குறைய நாமனைவரும் அதன் அருமையை யுணரச் சக்தியில்லாத இளம்பருவத்தில் வாசித்ததேயாகும்.

ஆறுவது = தணியத்தக்கது, சினம் = கோபம். அதாவது "கோபத்தை நாம் அடக்கவேண்டும்" என்பதே யிதன் பொருள்.

ஏறக்குறைய யாவருக்குமே யிது தெரியும். ஆயினும் கோபத்தை யடக்குபவர் மிகமிகச்சிலரே. ஆறுவது எனின், தணிவது, கொதிப்படங்குவது என்று பொருள். கோபம் மனக்கொதிப்பை யுண்டாக்கும் குணமாதலால் அதைத்தணியச் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. கோபம் பல பாபக்கிருத்தியங்களைச் செய்யும்படி தூண்டத்தக்கது. அது யாவர்க்கும் இயற்கையாகவே உண்டாகும் குணமாயினும் ஆன்மாவினுடைய சுபாவகுணமல்ல. எதெது தானேதோன்றி நமதுவசப்படாமல் தானே மறைந்துவிடுகின்றதோ அவையெல்லாம் ஆன்மாவின் சுபாவகுணமல்ல. கோபம் தன்னை மறந்தே வருகிறது. அந்தக்கோபத்தோடேயே ஒருவனைச் சற்றுநேரம் இருக்கும்படி சொன்னால் இருக்க முடியாது. அது எத்தகையகோபமாயினும் சற்றுநேரத்தில் ஆறிவிடும். சாந்தம் ஒன்றே. ஆன்மாவின் சுபாவகுணமாதலால், நீடித்து நிற்கக்கூடியது.

உலகில் அடியோடு கோபமில்லாதவனை இவன் ரோஷமற்றவன் என்று இகழ்ச்சியாய்க் கூறுகிறார்கள். கோபமுடையவனை "இவன் மகாகோபி. மூர்க்கன்" என்று தூஷிக்கிறார்கள். இலௌகிகத்தில் அடியோடு கோபமில்லாதவனுக்குப் பல அனுகூலக்குறைவுகள் நேரிடுகின்றன. உபாத்தியாயர் சற்றும் கோபம் காட்டாதிருந்தால் பிள்ளைகளுக்கு அவரிடம் அச்சமேயிராது. ஆகையால் பிள்ளைகளின் நன்மைக்காக அவர்கள் குற்றஞ்செய்தபோது உபாத்தியாயர் கடிந்து

கொள்ளவும், தண்டிக்கவும் வேண்டியவராகிறார். அப்படியே பெற்றோர் தம்மக்களிடத்தும், எஜமானன் தன் வேலைக்காரரிடத்தும் கோபங்காட்டவேண்டியது அவசியமாகிறது. ஆனால் அந்த குணம் கொடுங்குணமாகிய கோபமாகாது. ஆனால் அந்த உபாத்தியாயரே தன்னைமறந்துவரும் கோபத்தால் பிள்ளைகளை இன்னவிடத்தில் இவ்வளவு அடிக்கவேண்டுமென்ற வரம்பின்றியடித்தால் அது துர்க்குணமாகிய கோபமேயாகும்.

சிலருக்குச் சொல்பவிஷயத்திலும் சட்டென்று கோபம்வந்துவிடுகிறது. ஆனால் இந்தக்கோபம் மறுநிமிடமே அடியோடு மறைந்துவிடுகிறது. கோபம் காட்டப்பட்ட ஆளின்மேல் மறுநிமிடம் கருணையுண்டாய் விடுகிறது. இதற்கு முன்கோபம் என்றுபெயர். "நீரில் எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" அதாவது, "பெரியோர்களுக்குக் கோபம்வரின் (அது நீரில் கல் அல்லது அம்பு முதலியவை எறிந்தால் அந்தநீர் பிரிந்துஉடனே யெப்படி முன்போல் கூடிவிடுமோ அவ்வாறு) உடனே மாறிவிடும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

தீயோர்களுக்குக் கோபம் வந்தால் அச்சமயம் அது மிக்க கொதிப்போடு வெளியில் புலப்படாவிடினும், கோபத்திற்குக்காரணமானவர்களுக்கு ஒரு தீங்குசெய்யுந்தனிலும் அவர்கள் கோபம் ஆறுவதில்லை. இதுவே பாவத்தை யுண்டாக்கத்தக்க சண்டாளத் தன்மையுள்ள கோபம்.

இவ்வாற்றால் உலகில் அடியோடு கோபமற்றவர்களைக் காண்பது அரிது என்று தெரிந்துகொள்ளலாம். ஆனால் உலகப்பற்றை யொழித்து ஞானநெறி நிற்பவர்களிடம் எத்தகைய கோபமிருப்பினும் பெருங்குற்றமேயாம். அவர்களிடத்துள்ள கோபம் அவர்கள் ஞானத்திற்கே இடையூறாகும். துறவி, ஞானி, என விருப்பவர்களில் சிலரிடமும் கோபமிருப்பதைக்காணலாம். அத்தகையோர் ஞான மடைந்தோர் என்று நினைப்பதற்கில்லை.

ஏனெனில்,

கோபத்திற்கு மூலம் அகங்காரம். அதாவது "நான்" என்ற மமதை. அது நீங்கினாலன்றி கோபம் அடியோடொழியாது. அகங்காரம் நீங்கினாலன்றி ஞானம்கிட்டாது என்பது திண்ணம். இக்கோபம் அகங்காரத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதால் அதையடியோடொழிப்பது சுலபமானகாரியமல்ல. ஆயினும் நாம் கோபமடைவது

குற்றம் என்றுணர்வதற்குக்காரணங்களுண்டு. அவற்றை யுணர்ந்து சிந்தித்தால் நம்மால் கூடியவரையில் கோபத்தைத் தடுக்க முயல லாகும். தன்னையறிந்த ஞானிக்கோ கோபம் சுபாவத்திலேயே யில்லாமல் போய்விடுகிறது. மற்றையர் தம்முயற்சியால் கூடியவரையில் கோபத்தை யடக்கவேண்டும்.

மனிதரில் ஒருவருக்கொருவர் பாராட்டும் வித்தியாசமனைத்தும் நாமரூபமாகிய தேகசம்பந்தமானவையே. தேகத்தைநோக்கியேநான் பிராம்மணன், அவன் வைசியன் இவன் சூத்திரன் என்பதும், நான் சைவன், அவன் கிருஸ்தவன், இவன் வைஷ்ணவன் என்பதும். அத்தேகங்களையே உற்றுநோக்கும்போது எல்லாத்தேகங்களும் வித்தியாசமின்றிபஞ்சபூதசேர்க்கையாலுண்டான* சப்ததாதுக்களாலமைந்தவையே. மண்ணால் செய்யப்பட்ட பாண்டங்களனைத்தும் மண்ணேயாகும். அப்பாண்டங்களிலேனும் உருவத்தால் வித்தியாசமுண்டாகி குடம், சட்டி, கலசம், சானகை முதலிய பலநாமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மனிதர் தேகங்களிலோ ஒருவித்தியாசமுமில்லை. எல்லாத்தேகங்களுக்கும் ஒரேவிதமான அங்கங்களே இருக்கின்றன மற்றவித்தியாசங்கள் நம்மால் கற்பிக்கப்பட்டவை. ஆனால் ஆன்மாக்களிலோ வித்தியாசங்கள் கற்பிக்கவும் வழியில்லை. எல்லா ஆன்மாக்களும் ஒன்றே. எல்லா ஆன்மாக்களும் கடவுள் சொரூபமே. அங்கங்கிருந்து ஆட்டிவைப்பவரும் அவரே.

அப்படியிருக்க நாம் அந்த உண்மையை யனுபவமா யறியமுயலாமல் "நான்" "நான்" என்று வேறாய்ப்பிரிந்து, அந்த "நான்" என்ற அகங்காரத்தாலேயே அளவற்ற துன்பத்திற்குள்ளா யிருக்கிறோம்.

" நானென்னு மோரகந்தை யெவர்க்கும்வந்து
நலிந்தவுடன் சகமாயை நானாவாகித்
தான் வந்து தொடருமித்தால் வளருந்துன்பச்
சாகரத்தின் பெருமையெவர் சாற்றவல்லார்
*　　*　　*　　*　　*　　*　　"

என்று நம்தாயுமானவர் கூறியதே யிதற்குப் போதியசான்றும்.

எங்கும் பரம்பொருளே யிருப்பதாயின் நாம் என்ற ஆன்மாவே எதிரிலுள்ள நீயென்னும் ஆன்மாவும். அப்போது உண்மையில் ஒரு வித்தியாசமுமில்லை.

" யார்பெரியர் யார்சிறியர் யாருறவர் யார்பகைஞர்
சீர் பெரிய ானந்த சிற்சொருபர்—பேர்பெரியர்

* சப்ததாதுக்கள்;—சர்மம், உதிரம், இரசம், மாமிசம், அஸ்தி, மூளை, சுக்கிலம் ஆக 7.

எங்கெங்குந் தாமா யிருந்துசட சித்தனைத்தும்
அங்கங் கியற்றுவ தானால்"

என்ற ஆன்றோர்வாக்கியத்தை யுய்த்துணர்ந்தால் மேல்கூறப்பட்ட உண்மை விளங்கும்.

இந்த உண்மை யுணர்ந்தோர்க்குக் கோபம் வர வழியேயில்லை. ஆனால் இதை யுணர்தல் யாவர்க்கும் சாத்தியமானதன்று. கோபம் வரலாகாதென்பதற்கு வேறு காரணங்களுமுண்டு.

கோபம் தன்னை யுடையவனையே கெடுக்கும். ஒருவன் நமக்குப் பிரியமில்லாத ஒருகாரியத்தைச் செய்தால் நாம் கோபமடைகிறோம். அவன் நிலைமையில் நாம் இருந்து பார்த்தால் நாமும் அப்படியே செய்திருப்போமென்று நமக்குப் புலப்படும். அப்போது நாம் அவன் மேல் கோபிப்பது தகாதென்று நமக்கே புலப்படும். ஒருவன் நமக்குத் தீங்குசெய்தால் கோபத்தால் நாம் அவனுக்குப்பதில் தீங்கிழைக்கிறோம். அப்படிச்செய்வது நமக்குப் பாபமாகவே முடியும். ஏனெனில் ஒருவர் செய்யும் நன்மை தீமைக்குப் பதில்செய்வது கடவுள் பொறுப்பு. அந்தவேலையை நாமே யெடுத்துக்கொள்வதால் கடவுள் கோபத்திற்குப் பாத்திரமாகிறோம். ஒருவன் நம்மை யடித்தானென்று நாம் பதிலுக்கு அடித்தால் நியாயாதிபதி "அவன் உன்னை யடித்தால் நீ பிராதுசெய்யவேண்டியது. நீ அவனைப் பதிலுக்குத் தண்டிக்க உனக்கு அதிகாரமில்லை. ஆகையால் உன்னைத் தண்டிக்கிறேன்" என்று தண்டித்துவிடுகிறார். இதைப்போலவே கடவுளும் செய்கிறார்.

ஆகையால் இவைகளை யெல்லாம் சிந்தித்து நாம் கோபத்தை யடக்க நம்மால் கூடியவரை முயலவேண்டும்.

கௌரவம்

இவ்வுலகில் கௌரவம் என்ற பதத்தை விரும்பாதார் ஒருவருமில்லை. அன்னியர் நம்மை நன்கு மதிப்பதையே கௌரவம் என்று கூறுகிறோம். உயர் பதவியிலுள்ளோரும் தாழ்ந்த பதவியிலுள்ளோரும், தொண்டமான் முதல் தோட்டிவரையிலுமே கௌரவத்தை விரும்புகிறார்கள். எந்த அந்தஸ்திலிருந்தாலும் அததிலும் கௌரமுண்டென்றே மதிப்பது மனித சுபாவம் என்பதை யனுபவமாய்க்காணலாம். எத்தகைய அவலட்சணமும் அசுத்தமுமாகிய ஜெனனமாயிருந்தாலும், ஆன்மா தன் தேகத்தைப் பிரியத்தோடு

பாதுகாக்கிறதேயன்றி வெறுப்பதில்லை. நாய் கழுதை முதலியவற்றின் தேகங்களைக் கண்டால் நாம்தீண்டவும் அஞ்சி வெறுக்கின்றோம். ஆனால் அவைகளோ நாம் நமது தேகத்தில் எத்தகைய அன்புவைத்திருக்கிறோமோ அத்தகைய அன்பே அவைகளும் தம் தேகத்தில் வைத்திருக்கின்றன. இதுபற்றியே நமது மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள்

"எந்தவுடலேனு மெடுத்தவுட னல்லதென்று
சிந்தைசெய வந்ததிறம் செப்பாய் பராபரமே"

எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

மனிதரிலேயே உயர்ந்த ஜாதியார் தாழ்ந்த ஜாதியாருடைய தேகத்தைத் தீண்டவும் வெறுக்கின்றனர். ஆனால் அத்தாழ்ந்த ஜாதியான், ஐயோ! நமது தேகம் தாழ்ந்த ஜாதியாய் இருக்கிறதேயென்று விசன முறுகிறானோ? இல்லை. இதில் மட்டு மல்ல, ஜாதி தொழில் யாவற்றிலும் இவ்வாறே காணலாம். மேல் ஜாதியான் கீழ் ஜாதியை இழிவாய்க் கூறினாலும் ஒவ்வொரு ஜாதியானும் தன் தன் ஜாதியைச் சிலாக்கியமானதாகவே மதித்து விவகரிக்கிறான். ஜட்ஜ் உத்தியோகத்திலிருப்பவன் மனைவி தன் புருடன் தொழிலைப்பற்றி எவ்வளவோ கௌரவமாய்ப்பேசுகிறாள். "எங்கள் எஜமான் எப்படிப்பட்ட சிக்கலான வியாஜ்ஜியமாயினும் ஒரு விநாடியில் பைசல் செய்துவிடுகிறார். பத்திரிகைகளிலெல்லாம் அவரைப் பற்றி புகழ்ந்து எழுதப்பட்டிருக்கிறது" என்று பெருமையோடு கூறுகிறாள். ஆனால் அதே ஜட்ஜின் ஆபீசில் ரயிட்டர் வேலையிலிருக்கும் ஒருவனுக்கு நூறு ரூபாய் சம்பளமாயிருந்தாலும் அவனைப்பற்றி ஜட்ஜ் மனைவி மிக்க அலட்சியமாய் "அவன் என்ன எங்க எஜமானிடம் எத்தனையோ ரயிட்டர் இருக்கிறார்கள். அவர்களில் அவன் ஒருவன்" என்கிறாள்.

ரயிட்டர் மனைவியோ "எங்கள் எஜமான் ஜட்ஜ் ஆபீசில் இருப்பவர். அவர் வேலைச் சாமர்த்தியத்திற்காக ஜட்ஜுக்கு அவர்மேல் மிக்க பிரியம்" என்று பெருமையாகவே கூறுகிறாள்.

கடைசியில் யாவரும் மிக்க கேவலமாய்க் கூறும் குப்பைக்காரி கூட தன் கணவனைப்பற்றியும் அவன் தொழிலைப்பற்றியும் பேசும்போது "ஆ! எங்க ஊட்டுக்கார் 50 வீடென்றாலும் ஒரு நொடியிலெடுத்துவிட்டு வந்துவிடுவாரே" என்று மெச்சிக்கொள்கிறாள்.

இவ்வாறு எந்த ஜாதியும் எந்தத் தொழிலும் அதனைச்சேர்ந்

தோரால் கௌரவமாகவும் மற்றையரால் அகௌரவமாகவும் கருதப் படுகின்றன.

சாதாரணமாய் உலகத்தார் யாரைக் கௌரவமாய்க் கூறுகிறார்களோ அவர்களே உண்மைக் கௌரவமுடையோரென்று கருதலாமெனில் உலகத்தார் கௌரவம் காட்டுவதெல்லாம் பெரும்பாலும் வெளிவேடத்திற்கேயென்று தெரிகிறது. ஒருவன் மிக்க உலோபியாகவும், கருணையற்றவனாகவும், அன்னியரை மோசம்செய்து பொருள் சம்பாதிப்பவனாகவும், தெய்வசிந்தனையே யில்லாதவனாகவும் இருந்தபோதிலும், அவனிடம் அதிக செல்வமட்டுமிருந்தால் உலகத்தார் அவனிடம் எவ்வளவோ கௌரவம் பாராட்டுகிறார்கள். எல்லா உத்தமகுணங்களும் பொருந்தியவனாயிருந்தாலும் அவன் பொருளில்லானாயின் உலகம் அவனை யலட்சியம் செய்கிறது. ஒருவன் அதிகாரமும் செல்வாக்குமுடைய ஒரு உத்தியோகத்திலிருந்தால் அவன் எவ்வளவு அயோக்கியனும் அக்ரமஸ்தனுமாயிருந்தாலும் உலகம் அவனைக் கௌரவத்தோடு நடத்துகிறது. உலகம் பொருளுள்ளமட்டும் ஒருவனைக் கௌரவப்படுத்தும், பொருள் நீங்கின் அவனை யலட்சியம் செய்துவிடும்.

ஆகையால் நாம் உலக கௌரவத்தை எதிர்பார்த்து ஒரு காரியத்தைச் செய்யலாகாது என்றும், உலக கௌரவத்தை விரும்புவது ஆன்றோர் செய்கையல்லவென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஒருவனிடம் இலட்சம் ரூபா யிருக்கிறது. அவனை ஒருவன் வீடு தேடிவந்து "ஐயா, நான் இரண்டு நாளாய் பட்டினியிருக்கிறேன்" என்று அழுதால் அவனுக்கொரு காசுகூட கொடுக்கமாட்டான். கவர்னர் சுற்றுப்பிரயாணம் வருகிறாரென்றால் 500 ரூபாய் செலவிட்டு வழியில் பந்தல்போட்டு வைக்கிறான். உலகம் இவனைக் கௌரவப்படுத்தினாலும், இராஜாங்கத்தார் இவனுக்கு ஆங்கில எழுத்துகள் 26-யும் பட்டமாய்க்கட்டினாலும் உண்மையில் இவன் கௌரவம் என்ற பெயருக்குரியவனாகான்.

தினந்தோறும் எட்டணாவிற்கும் குறைந்தவருமானமுடைய ஒருவன் தன் கையில் ஒருபைசாவே யிருக்கும்போது "ஐயா பசி" என்னும் ஒருவனைக்கண்டு இரக்கமுற்று அந்தப்பைசாவை யவனுக்குக் கொடுத்துவிடுகிறான். இவன் கௌரவத்திற்குரியவனேயன்றி மேற்கூறப்பட்ட செல்வவந்தனல்ல. சிலர் கௌரவத்திற்கென்றே தானதருமம் செய்கின்றனர். ஒருகோயில் கட்டுவதற்காக எங்கோ

ஒரு மூலையில் போடப்படும். ஒரு துண்டு கல்லைக்கொடுப்பவன் தன் பெயரை யக்கல்லில் செதுக்கவேண்டுமென்கிறான். இத்தகையோர் தாம் செய்யும் தருமத்தால் ஒருபயனு மடையமாட்டார்கள்.

ஆகையால் உலக கௌரவத்தை யெதிர்பார்த்து ஒரு நற்கருமத்தைச்செய்யலாகாது. உலகம் வெளிவேடத்தைமட்டும் கண்டு பாத்திரமில்லாவிடத்தில் கௌரவம் கற்பிப்பதோடு மகா உத்தமர்கள் மேலும் அவதூறு கூறும் இயல்புடையது. மகாபதிவிரதா சிரோமணியாகிய சீதாபிராட்டியார் மேலேயே உலகம் அவதூறு மொழிந்ததென்று கூறப்பட்டிருக்கிறது. ஒருவனிடத்தில் ஆயிரம் நற்குணங்களிருப்பினும் அவற்றை விட்டுவிட்டு அவனிடம் குற்றம் போல் வெளிக்குமட்டும்தோன்றும் ஒன்றிருப்பின் அதையே பறையறையும் இவ்வுலகம்.

ஆதலால் அறிவுடையோர் உலகெகௌரவத்தை யொருபொருட்டாய் மதிக்கவே மாட்டார்கள். அவ்வாறு உலககௌரவத்தை யெதிர்பாராமல், தன் மனசாட்சியின்படி எந்த சத்கருமத்தையும் பிறர் அறியவேண்டுமென்று நினைக்காமல் செய்பவனே உண்மையான கௌரவத்திற்குப் பாத்திரவானாவான்.

இயற்கைப் பொருட்பாடம்

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

தண்ணருண் மிகையினலித் தாணியைத் தானேயாக்கி
விண்சுடர் பலவும் தத்தம் விரிகதி ரொளியைவீசப்
பண்ணிடு பரம னற்றாள் பணிவொடு பரவிச் சீரார்
மண்ணொடு விண்ப டைப்பின் மாட்சிமை யறிது நாமே.

I வானசாஸ்திரம்

கடவுளுடைய படைப்பில் மானிடரது கண்களுக்குப் புலப்படுவன மண்டலமும் விண்டலமுமே. நாம் வசிக்கும் இப்பூமிக்கு மண்டலமென்றும், நாம் காணும் வானுக்கு விண்டலமென்றும் பெயர். மண்டலத்திலுள்ள சிருஷ்டிப்பொருள்களை நாம் நமது பஞ்சேந்திரியங்களால் அறிதல் கூடும். விண்டலத்திலுள்ள நக்ஷத்திரங்களையும் சூரிய சந்திராதிகளையும் நாம் அடுத்துச்சென்று கண்டறிதல்கூடாது. நாம், மிகச் சிறந்த தூரதிருஷ்டிக் கண்ணாடியினுதவியால் அவற்றின் சிலவற்றைக் காணுதல் கூடும். ஆனால், தூரதிருஷ்டிக் கண்ணாடி எவ்வளவு சிறந்ததாயிருந்தாலும், அதனால் வானத்திலுள்ள எல்லா

நக்ஷத்திரங்களேயும் பார்க்கமுடியாது. நமதுகண்ணுக்கு அகப்படாத நக்ஷத்திரங்கள் பலவுள. மிகச் சூட்சுமமாகப் பரிசோதித்துப் பார்த்தாலும் நக்ஷத்திரம் என்பது வானத்தில் நெடுந்தூரத்தில் காணப்படும் சுடரொளியே யொழிய வேறன்று. நாம், தினந்தோறும் நக்ஷத்திரமண்டலத்தைச் சிறந்த தூரதிருஷ்டிக் கண்ணுடியினுதவியால் உற்று நோக்கிப் பரிசோதித்தால் சில நக்ஷத்திரங்கள் தமது இருப்பிடம் விட்டுப் பெயராமல் ஒரே நிலேயில் காணப்படுகின்றன. அவ்வித நக்ஷத்திரங்களுக்கு ஸ்திர நக்ஷத்திரங்கள், எனப்பெயர். வேறு சில நக்ஷத்திரங்களே நாம் பற்பல தினங்களில் பரிசோதித்தால் அவைகள் ஒரே இடத்தில் நிலேயாயிராமல் வெவ்வேறு இடங்களுக்கு மாறிப்போவதைக் காணலாம். அவ்வித நக்ஷத்திரங்களுக்கு "கிரகங்கள்' என்று பெயர். புதன், சுக்கிரன் அல்லது வெள்ளி, பூமி, அங்காரகன் அல்லது செவ்வாய், வியாழன் அல்லது பிரகஸ்பதி, சனி, யுரானஸ் நெப்த்யூன் ஆகிய எட்டு கிரகங்கள் சூரியனேச் சுற்றுகின்றனவென்று நமக்கு தெரியவருகிறது.

சூரியன் எப்போதும் எரிந்துகொண்டிருக்கும் ஒரு பெரிய அக்நி கோளம். அது இப்பூமிக்குப் பல்லாயிரம் மைல் தூரத்தில் இருக்கின்றது. அதற்கு சுய ஒளிப் பெருக்குளது. அதனுடைய சரியான உருவத்தைக் கண்டுபிடிக்க இன்னும் யாராலும் முடியவில்லே. சூரியன் பேரொளியுடன் பிரகாசிக்கிற பெரிய கோளம். சூரியனே நக்ஷத்திரங்களுக்குள் மிகப்பெரியது.

கிரகங்கள் சூரியனிடத்திலிருந்து ஒளியைப்பெறுகின்றன. எல்லாக் கிரகங்களிலும் பூமியே மிகச் சிறியது. இந்த கிரகங்களேச்சுற்றி வருவனவெல்லாம் உபகிரகங்களெனப் பெயர் பெறுகின்றன. ஒவ்வொரு கிரகத்தையும் சுற்றி உபக்கிரகங்கள் பலவுள. சந்திரன் பூமியைச் சுற்றும் ஓர் உபக்கிரகம். அது பூமியைவிட ஐம்பது மடங்கு சிறியதும் பூமிக்கு 2,38,000 மைல் தூரத்திலுள்ளதுமாயிருக்கிறது. பூமி சூரியனேச் சுற்றும்போது, சந்திரனும் பூமியைச் சுற்றி வருகின்றது. சந்திரனுக்குத் தன்னொளி கிடையாது. அது சூரியனிடத்திலிருந்து ஒளியைப்பெற்று அவ்வொளியை இப்பூமியின்மேலே பிரதிபலிக்கச் செய்கின்றது. சந்திரனிடத்திலிருந்து பிரதிபலிக்கும் வெளிச்சம் குளிர்ச்சியாக இருப்பதால் சந்திரன் மிகக் குளிர்ந்த கோளம் என்று அறிகிறோம். பூமியானது சூரியனேச் சுற்றி வருகையில், சந்திரன் பூமியைச் சுற்றிக்கொண்டிருப்பதாலே, இராக்காலத்

தில் தன்மேல் விழும் சூரிய கிரணங்களின் வெளிச்சத்தைச் சந்திரன் இப்பூமியின்மீது பிரதிபலிக்கச்செய்கின்றது. பகற்காலத்தில் சூரிய னுடைய வெளிச்சத்திற்குமுன் வேறெந்த வெளிச்சமும் பிரகாசிக்கா மல் ஒளி மழுங்கிவிடும். ஆகையினாலேதான் சந்திரன் பிரதிபலிக்கச் செய்யும் ஒளியும் நக்ஷத்திரங்களின் ஒளியும் இராக்காலத்தில் மாத் திரம் காணப்படுகின்றன. சந்திரனுடைய வெளிச்சம் அமாவாசை கழிந்த முதல் 15 நாட்களுக்கு தினந்தோறும் இரண்டு நாழிகைகால மாக விருத்தியாகின்றது. ஏனெனில் அதன் உருவம் அப்போது கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்கிறது. பிறகு அவ்வெளிச்சம் 2வது 15 நாட்களுக்குத் தினந்தோறும் இரண்டு நாழிகை வீதம் குறைந்து கொண்டே வருகிறது. அப்போது சந்திரன் உருவம் கொஞ்சம் கொஞ்சமாய்க்குறைந்து வருகிறது. இவ்வாறே வேறு சிலநக்ஷத்திரங் களுக்கும் சிலகாலம் ஒளி அதிகரித்தலும் சிலகாலம் ஒளி குறை தலும் இயற்கையெனக் காணப்படுகிறது. (இன்னும்வரும்)

தருமம்.

தருமம் என்னும் பதம் திரி என்னும் சமஸ்கிருத தாதுவி லிருந்து உண்டானது. இந்த திரிஎன்னும் தாதுவிற்கு காப்பாற்று என்பது பொருள்—இப்பிரபஞ்ச வாழ்க்கை என்னும் ஆசாபாசப் படுகுழியில் தப்பித்தவறிவிழுந்து தத்தளிக்கிறவர்களுக்கு கைகொடு த்து பாதுகாக்குஞ் செய்கைக்கு தருமமென்பர். இப்பூமண்டலத் தின்கண் விசேஷதருமம், சாமானியதருமம் என இருவகைக ளுண்டு. அவற்றுள், விசேஷதருமமென்பது எல்லோராலுஞ்செய்ய சாத்தியப்படமாட்டாது. சாமானிய தருமமென்பது எல்லாதேச வாசிகளுக்கும், சகல காரியத்திற்கும் பொதுவானவை. இது அனே வராலும் அங்கீகரிக்கத்தக்கது. அவை “ நன்மைசெய், தீமைமற, ” என்னுஞ் சத்கருமங்களே.

இத்தருமத்தில், ஈகை, ஜீவகாருண்யம், பரோபகாரம், பக்ஷ பாத மின்மை, உதாரகுணம், துன்பங்கண்டிரங்கல், பொறுமைமுத லான அநேக நற்குணங்கள் அடங்கியிருக்கின்றன.

நமது இந்துசாஸ்திரத்தில் ஆரியர்பூர்வீககாலந்தொட்டு அனுஷ் டித்துவந்த முப்பத்திரண்டுவித தருமங்கள் சொல்லப்பட்டிருக்கின் றன. அஃதாவது:—

(1) அறுசமயத்தாருக்குண்டி—அறுசமயத்தாருக்குணவுதரல்.

(2) அறவைச்சோறு—திக்கற்றவனுக்கு போஜனமளித்தல்.

(3) அறவைப்பிணஞ்சுடுதல்—அனாதப்பிரேதங்களை யடக்கஞ் செய்தல்.

(4) அறவைத்தூரியம்—திக்கற்றவனுக்கு வஸ்திரம் முதலியன கொடுத்தல்.

(5) ஆதுலர்க்குச்சாலை—ஏழைகள் குடியிருக்க வீடுமுதலியன கட்டிக்கொடுத்தல்.

(6) ஆவுரிஞ்சுதறி—கால்நடைகள் உடம்பைத் தேய்த்துக் கொள்ள கற்கள், அல்லது மரங்கள் நட்டு வைத்தல்.

(7) ஏறுவிடுத்தல்—பசுக்களையுங்காளைகளையும் பிணையவிடுதல்.

(8) ஐயம்—ஏழைகளுக்கு இல்லையென்னாது பிச்சைகொடுத்தல்.

(9) ஓதுவார்க்குணவு—யார் யார் தன் வீட்டுவாயலில்வந்து படிக்கிறார்களோ அவர்களுக்கு அன்புடன் போஜனமளித்தல்.

(10) கண்ணாடி—முகம்பார்க்க கண்ணாடி வைத்தல்.

(11) கண்மருந்து —கண்நோய்களுக்கு மைகொடுத்துச் சுகப் படுத்துதல்.

(12) கன்னிகாதானம்—கன்னிகைகளை சொத்துடன் விவாகஞ் செய்துகொடுத்தல்.

(13) காதோலை—ஏழைப் பெண்பிள்ளைகளுக்கு காதோலைச் சுருள் கொடுத்தல்.

(14) சுண்ணம்—தாம்பூலந்தரிக்கசுண்ணாம்புதரல். "வெள்ளை கொடுத்தால் வினைபோகும்," என்பது ஆன்றோர் கொள்கை.

(15) சிறைச்சோறு—குற்றஞ்செய்த கைதிகளுக்கு உணவளித்தல்.

(16) சோலை—வழிப்போக்கருக்குத் தங்க தோப்புகளுண்டு பண்ணல்.

(17) தலைக்கெண்ணெய்—ஏழைகள் தேய்த்துக் குளிக்க எண்ணெய் கொடுத்தல்.

(18) தண்ணீர்ப்பந்தல்—வழிப்போக்கருக்கு தாகத்தை நீக்கும்பொருட்டு நீர்மோர், பானகம் முதலியனவளித்தல். இவ்வாறு கொடுத்தலுக்காக பந்தல் முதலியன அமைத்தல்.

(19) தடம்—ரோட்டுகள், தடாகங்கள், குளங்குட்டங்கள் முதலியன ஏற்படுத்தல்.

(20) தின்பண்டம் நல்கல்—யாத்திரைக்காரருக்கு உணவுமுதலியன கொடுத்து தம்மாலியன்ற உதவிபுரிதல்.

(21) நாவிதன்—ஏழைகளுக்குத் தர்மக்ஷவரஞ் செய்துவித்தல்.

(22) நோய்மருந்து—வியாதியஸ்தர்களுக்கு மருந்தீந்து குணப்படுத்துதல்.

(23) பசுவுக்குவாயுறை—பசுக்களுக்குத் தீனிபோட்டு வளர்த்தல்.

(24) பிறர்துயர் அகற்றல்—ஏழைகளினடுத்துப்போய் ஆதரவு செய்து அவர்களினுடைய துயரத்தை நீக்குதல்.

(25) பெண்போகம்—ஏழை புருஷர்களுக்கு கலியாணஞ் செய்துவித்தல்.

(26) மகப்பெறுவித்தல்—பிள்ளைபெறுவோருக்கு உதவிபுரிதல்.

(27) மகவுவளர்த்தல்—பிள்ளையைப்போஷித்தல். அதிலுந் தாய் தந்தையற்ற பிள்ளையை வளர்த்தல் நன்று. இதுபற்றியே, "ஊரார்பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன்பிள்ளை தானேவளரும்" என்று அறிஞர் சொல்லாநிற்பர்.

(28) மகப்பால்வார்த்தல்—குழந்தைகளுக்கு பாலூட்டுதல்.

(29) மடம்—யாத்திரைக்காரருக்குத் தங்க சத்திரமுதலிய கட்டிடங்கட்டுதல்.

(30) வண்ணார்—ஏழைகளின் வஸ்திரமுதலியன வெளுக்க கூலிகொடுத்தல்.

(31) விலங்கிற்குணவு—மிருகங்களுக்குஉணவு, தண்ணீர் முதலியன வளித்தல்.

(32) விலைகொடுத்துயிர்காத்தல்—பொருள் கொடுத்து பிராணனைக்காத்தல்.

ஒருவனுக் கெவ்வளவு ஐசுவரிய மிருந்தபோதிலும் அதையவன் கூடக்கொண்டு செல்லுகிறானில்லை. ஒருவனிறந்தவுடனே அவனது நல்வினை தீவினைகளே அவனுடன் இங்கு நில்லாது தொடர்ந்து செல்லுகின்றன.

" காதற்ற ஊசியும் வராதுகாண் கடைவழிக்கே " என்று பட்டணத்தடிகளுஞ் சொல்லியிருக்கிறார். ஆகவே, நாம் இம்மையில் செய்யவேண்டிய விஷயமென்னை ?

நமக்குத் தெய்வங் கொடுத்துள்ளதில் மனச்சந்தோஷத்துடன் புசித்துவிட்டு நல்விஷயங்களில் பயன்படுமாறு பார்த்தல்வேண்டும்.

அஃதில்லாது கேவலம் வயிறுமட்டும் வளர்ப்போமாகில் அவ்வாறு செய்துவரும் காட்டுவாசிகளுக்கும் நமக்கும் என்ன பேதமிருக்கிறது ?

ஆகவே, தருமம் செய்யாவிடின் ஆண்டவன் நம்மிடங் கொடுத்திருக்கிற தனத்தையும், காலத்தையும் பிரயோசனப்படுமாறு செய்தவர்களாகமாட்டோம். அப்பொழுது நம்மைப்போன்ற சிதடிகள் ஒருவருமே யிலராவர். ஆகையால் நாம் நம்மாலியன்ற வளவு அறஞ்செய்து வரவேண்டியது. இவ்வறந்தான் நாம்போகும் வழிக்கு ஒரு உத்தமத்தோழன். அப்படிக்கிருக்க, நம்மவரில் அநேகர் தருமத்தைப் பிற்பாடு (தள்ளாடினகாலத்தில்) பார்த்துக்கொள்ளலாமென்று நினைக்கின்றனர் இது மிகவுந் தவறானதே. ஏன் என்றால், "க்ஷணப்பித்தம், க்ஷணச்சித்தம். ஒருவனது எண்ணமானது விநாடிதோறும் மாறுகின்றது. மேலும் "நாளை நாளை" யென்போமேல் நாளை நம்முடைய நாளாகுமோ, நமனுடைய நாளாகுமோ அறியோம்.

அவ்வாறிருக்க நாம் விருத்தாப்பிய காலம்வரை உயிருடன் நீடித்திருப்போமென்பது என்ன உறுதி ? ஒருவன் வயதானகாலம் வரை பிழைத்திருந்தாலும் அவனுக்கு சிசுருஷைசெய்ய நான்கு ஆட்கள் வேண்டுமே. அவ்வாறிருக்க, அவன் அச்சமயத்து என்ன அறம் செய்யப்போகிறான். ஆதலின், " எப்பொழுதும் காலைச்செய்வோமென்று அறத்தைக் கடைப்பிடித்து, சாலச் செய்வாரே தலைப்படுவர் " இதுதான் மேலோரின் துணிபு. இது நிற்க:

ஒருவனுக்குப் பொருளில்லை தருமஞ்செய்வ தெங்ஙனமென்று சொல்வது வீண்சாக்குப் போக்கேயன்றி வேறே ஒன்றுமில்லை. தருமம் எல்லோராலும் செய்யத் தகுந்ததென்று முன்னமே சொல்லினோம். ஒருபணக்காரன் பொருளினால் தருமஞ்செய்தால் மற்றவன் தன் சரீரத்தினால் உழைக்கலாமல்லவா. வழியில் முட்கள், கற்கள், கண்ணாடி சில்லிகள் கிடந்தால் அதனை காலில் தைக்காத வண்ணம் ஒதுக்கி வைக்கிறதுந் தருமம்தான். அன்னியதேசத்தானோ, திக்கற்றவனோ, வழிதெரியாது எங்கேயாவது போகும்பட்சத்தில் அவர்களைப் பொது ரஸ்தாவிலோ நேர்வழியிலோ, அல்லது சமயமிருந்தால் அவர்கள் விரும்பிய விடத்திற்கோகொண்டுபோய் விடுவதுந் தருமந்தான். இதற்குப் பணமும் வேண்டாம். இப்பரோபகாரமும் செய்யாதவர்கள் இப்புவனத்தில் அனந்தங்கோடியுண்டு. ஆனால் இவர்களுக்கு என்னகதிவருமோ, அறியேன். ஒருவனுக்கு

விசேஷதருமமும், சாமானியதருமமும் செய்வதற்கில்லை என வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவனிடம் தருமசிந்தனையாவதிருக்கலாமே. அதனாற்றான் ஔவையாரும் " அறஞ்செய் " என்றாது " அறம் செய விரும்பு " என்றனள். இச்சிந்தையுமில்லாது எத்தனைபேர்களிருக்கின்றனர். அந்தோ! ஒருவன் பிச்சை யாதேனுங் கொடுத்தால் மற்றவன் விலக்குகின்றான். ஆனதினால் இவன் ஈவது விலக்கும் பாபிகளிலொருவனாகின்றான். இவன் இயற்கையிலேயே அகக்கண்ணை இகழ்ந்திருத்தலோடு புறக்கண்ணையு மிகழ்ந்துவிடுகின்றான். இப்பூமியில் பலருள்ளும் தருமசிந்தனையுள்ளவர் சிலரினுஞ் சிலரே. அவருள் சிலரேயாவர் கைம்மாறு விரும்பாது ஈபவர்.

தருமம் செய்வதில் பல விதங்கள் உண்டு. சிலர் தங்களை அதிக கௌரவமானவர்களென்றும், தருமவான்களென்றும் ஊரார்மெச்சும் பொருட்டு அதிக பொருட்செலவுசெய்து தருமங்கள் செய்கிறார்கள். வேறு சிலர் மனதிலுண்மையான பிரியமில்லாது பிச்சைக்காரர்களால் உண்டாகுங் கூச்சலை நீக்க வேண்டுமென்றே பிச்சையிடுகிறார்கள். மற்றுஞ் சிலர், அறவட்டி வாங்கி ஆயிரங் குடிகளை யோட்டி ஓர் பிள்ளையார் கோயிலைப் புதுப்பிக்கின்றனர். இவ்வாறு செய்யுந் தருமங்கள் உத்தமமானவையல்ல. கோபம், கடுஞ்சொல் முதலான இழிவான செய்கைகளில்லாது மனத்திருப்தியுடன் தம்மாலியன்றதை ஒருவருக்குக் கொடுத்து அவர்களுடைய கஷ்டத்தை நீக்குவதே சிறந்தது.

" இன்சொல் விளைநிலனா வீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்பு நீர்பாய்ச்சி அறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய் "

என்ற அறநெறிப்படி, முகமலர்ச்சியோடு கூடிய இன்சொல்லை விளைநிலமாக்கி ஈகையை அதில் விதையாகப்பரவி, கடுஞ் சொற்களை களையாகப் பறித்து, உண்மை என்பதை நீராகப் பாய்ச்சி, தருமம் என்னும் கதிர் தள்ளும்படியாக தக்க பருவத்தில் ஓர் அறப்பயிரை யிடவேண்டும். பிச்சைக்காரர் விஷயத்தில் பெண்களுக்குக் கோபம் சற்றாகிலும் உண்டாகக்கூடாது. ஏன் என்றால் கடினமான வார்த்தைகளைப்பேசும் பெண்களிடத்தில் இலட்சுமி சேரமாட்டாள். அப்படிப்பட்டவர்கள் ஆயுள் விருத்தியின்றி சீக்கிரம் நசித்துப்போம்.

" ஒப்பொடு முகமலர்ந்தே யுபசரித்துண்மைபேசி
உப்பில்லாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும்

முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத்திடுவோராகிற்
கப்பிய பசியும்போகாக் கடும்பசி யாகுந்தானே "

என்றபடி ஒரு ஸ்திரீயானவள் உண்மையான முகமலர்ச்சியோடு தக்க உபசாரங்களைச்செய்து ஒருவருக்கு உப்பில்லாக் கூழிட்டபோதிலும் அது தேவாமிர்தமாகும். அப்படிக் கில்லாது, முகக்கடுப்புடன் முப்பழங்களோடு கூட்டினபாலன்னத்தை ஒருவருக் கிட்டபோதிலும், அதுயாதொருபலனையுங் கொடாமல் முன்னிருந்த பசியைக் காட்டிலும் அதிகபசியை உண்டாக்கிவிடும். இத்தருமங்களினாற் பயனென்ன ? ஆதலின், நாம் தருமம் செய்யுங்கால் புகழ் முதலிய எவ்வித சுயப்பிரயோசனத்தையும் நாடலாகாது. மனிதனை ஏமாற்றி விடலாம். அவ்வாறு கடவுளைஏமாற்றிவிடலாமென்று கனவிலுங் கருதலாகாது. அவர் நம்மை உள்ளும்புறமும் அறிவார். தருமத்திற்கு ஒருக்காலும் பங்கமில்லை, தருமமே ஜயம். தருமமே அழிவற்றது. நம்முடன் வருவதுமதுவே. ஆனதினால், நாம் ஒவ்வொருவரும் தருமஞ் செய்து வருவோமாக.

தருமம் துடங்குங்கால்துன்பமா யின்பம்பயக்கும். இதற்கு திருடாந்தமாக ஒரு சிறுகதையுண்டு. (தொடரும்)

வேதாந்த போதினி.

1. ஜநநமென்னும் சமுத்திரத்தில் ஆசையெனும் முதலையானது பிடித்திழுக்க மரணம் என்னும் சுழலிலகப்பட்டு, சுழல்கிறேமென்று அறிகிறவர்களுக்கு மனமென்னும் கப்பலானது எட்டும்.

2. மனோசங்கற்பமே மாயை முதலியவைகளாகத் தோன்றும்.

3. சுருதி, யுக்தி, அனுபவமுள்ள மனதினால் அவையில்லாத மனதைக் கெடுக்கவேண்டும்.

4. தாவிக்கொண்டிருக்கும் மனதைச் சங்கற்பரகிதமென்னும் கத்தியால் சேதிக்கக்கூடும்.

5. மனோநாசமான விடமே பரம சுகமென்பதாம்.

6. இனிமை என்று சொல்லப்பட்ட விஷயம் யாவும், தீமையாகத் தோன்றினால் மனது நாசமாய், விஷயதோஷ திருஷ்டியினால் மனதைக்கெடுத்து ஞானதிருஷ்டியினால் தன்னை யறிய வேண்டும்.

7. இரும்பால் இரும்பைத் திருத்துவதுபோல் சன்மார்க்கத்தில் பிரவேசிக்க முயல்கின்ற சுத்தமனதால் அசுத்த மனதைத் திருப்பக்கூடும்.

8. அநந்த சங்கடங்கள் உண்டாயினும் அச்சங்கடங்களை யுணராதிருப்பதே மனமிறந்த குறி யென்பதாம்.

9. நிராசையினால் அவ்விகற்பங்களைக் கெடுக்க வேண்டும்.

10. பரமபதத்தைக்கொடுக்கிறதற்கு நிராசையே காரணமாம்.

11. அலை கடலைவிட்டு நீங்காததைப்போல தாழ்வைச் செய்கிற சஞ்சலமானது மனதைவிட்டு நீங்காது. "மனம் குவிந்தவிடமே மாதவமாம்."

12. சங்கல்ப விகல்பமான மனமே ஆத்ம சுகத்திற்கு விக்கினம்.

13. ஆத்ம விசாரத்தால் மனோ சஞ்சலத்தைக் கெடுக்க வேண்டும்.

14. உள்ளதாகிய பிரம்மத்திற்கும், இல்லாததாகிய ஜகத்திற்கும் நடுவிலிருந்து சித்திலும் ஜடத்திலும் பொருந்தி மத்தியிற் சலித்துக்கொண்டிருப்பதே மனமாகும்.

15. மனமானது ஜடசித்து வடிவமாகும்.

16. இம்மனமானது அறிவின் முயற்சியால் ஞானஸ்வரூபமாம். அறியாமையினால் ஜகத்தாம்.

17. சித்து ரூபமான மனதினால் ஜடவுருவமான மனதைக் கெடுக்க வேண்டும்.

18. சித்துரூபமான மனதைத் தவிர ஆத்மாவிற்கு வேறு சகாயமில்லை. (இன்னும்வரும்.)

பொது நலம்

1. பூமியில் மானிடராய், கூன், குருடு, செவிடு, பேடு முதலிய அங்கஹீனமில்லாமலும், கல்வியும், ஞானமும் அடைந்து தானமும், தவமும், செய்து ஈசுவரபக்தி யுடையரா யிருப்பதே சகலத்திலும் மேன்மையானது.

2. அநேக மனிதர்கள் தன் தேக சம்ரட்சணையின் பொருட்டு காலை 6-மணி முதல் மாலை 6-மணிவரையில் பெரும் பாடுபட்டு பாக்கியிருக்குங் காலங்களில் வீண்வம்புகள் பேசும் சுபாவகுண முடையவர்களாய் இருக்கிறார்களே தவிர, நம் பெரியோர்கள் முன்படித்து அனுஷ்டித்துவரும் ஞானசாஸ்திரங்களில் அன்புவைத்து சிறுபொழுதேனும் கவனம்வைப்பது கலியில் பதினாயிரத்தில் ஒருவருண்டோ என்பது சந்தேகம்.

3. ஞானஸாஸ்திரங்களைப் படிக்க சகலருக்கும் புத்தி வராது எப்படி எனில் கல்லுக்குள் தண்ணீர் புகாதுபோல் கடினமாயிருக்கும் ஹிருதயத்தில் நுட்பமாயிருக்கும் ஞான ரசம் புகாது.

4. ஆசையெனும் பிசாசைத் தன் ஹிருதயத்திலிருந்து ஓட்டாதவரையில், ஞான ரசம் ஹிருதயத்திற்குள் வர இடங்கொடாது.

5. சாதுஸங்கம், விசாரணை, தெய்வபக்தி, வைராக்கியம், ஸத்தியம், நன்னடக்கை, பரமாதரைத் தன் அன்னைபோல் பாவித்து, பரதிரவியம் ஓட்டாஞ் சல்லிபோல் நினைத்து, மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவித்து, மண், பெண், பொன் முதலிய மூவாசையைத் தன்னால் இயன்றமட்டும் அடக்கி, விசாரணையால் சற்குருவையடைந்து தன் தேகத்திலிருக்கும் 96 தத்துவங்களை யறிந்தபின் உபதேசம் செய்ய சத்குரு தானாகவே வருவார். எப்படியெனில் கன்னிகை பருவமடைந்திருந்தால் புருடன் அவளைத் தானே தேடி வருவதுபோல். கடவுள் ஒருவர் உண்டென்பது சாமானிய ஞானம். அந்தக் கடவுள் எங்குமாய் யாவுமாய்த் தானாகவுமிருக்கிறுரென்றறிவது விசேஷ ஞானம். சூரியனை பிம்பமாகச்சொல்லி அதின் பிரதி பிம்பமே ஜீவனாகச் சொல்லி அந்த சூரிய ஜோதியை தன் ஹிருதயத்திற் காண்பவனே மகா புருஷனும்.

சசிவர்ணபோதம்

(16-வது பக்கத்தொடர்ச்சி)

சசிவர்ணு! நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேள். ஏனெனில்?

வறுமையான்மடமைதன்னால் வருந்திநெஞ்சழியுங்காலை
யுறுதிசெய்துணையாங்கற்ற வுணர்வினைவளர்க்குமென்று
மிறுதியில்லாதவின்ப மீட்டுமாதலினுற்கற்று
மறுவறுமொழுக்கமுள்ளார் வாய்மொழிகேட்டல்வேண்டும்.

(விநாயக புராணம்)

என்னும் விஷயத்தை நான் மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்ட வேண்டுவதில்லை அப்பா!

யோசித்துப் பார்க்குங்கால், இவ்வுலகத்தில் கடவுளால் உண்டாக்கப்பட்ட சராசரத் தோற்றங்களாகிய ஜீவபேதங்களில் முதன்

மையாய மானிடத் தோற்றங்கட் குண்டான, இகத்திற்குரிய இக போகங்களையும் பரத்திற்குரிய பரபோகங்களையும் அனுபவித்து மேலோங்குமாறு கருணையங்கடலாற் கனிந்த கடவுளார், அபார மான பெரிய நான்கு சாதனங்களை உதவியிருக்கிறார். அச் சாத னங்களோ சொல்லுதற்கரியன, அளவிடற்காகாதன, என்றாலும் அவற்றின் விவரங்களைச் சிறிது சொல்லுகிறேன் கேள்.

அவற்றிர்கு (1) தநு, (2) கரணம், (3) புவனம், (4) போகம் என்று பெயர்.

1-வது—தநு. நம் தேகத்திற்குக் காரணமாயிருக்கும் தேகி யானவன் அருவமா யிவ்வாக்கையுள் ளமர்ந்திருக்கிறா னென்றும் அவனாலேயே சகல ஆடம்பரங்களும் நிறைவேறுகின்றன வென்றும் அவனில்லையேல் இவ்வுடல் சடமேயாமென்றும் முன்னமேயே விவ ரிக்கப்பட் டிருக்கிறது.

அந்தப்படி உருவில் சூனியமாயும் உணர்வில்லாமலு மிருந்த ஓர் பொருளாகிய நமக்கு உணர்வு கொடுத்து ஜீவனாகச் செய்து அச் சீவன் நிலைபெற்றிருக்கும் பொருட்டு சூக்குமமான ஓர் தேகத்தையு முதவி அத்தேகம் நிலைத்திருக்கத் தக்க வசதியான வீடென்னும் இத்தநுவை உதவி யிருக்கிறார்.

2-வது—கரணம். இத்தகைய தநுவுள் அமரப்பெற்ற ஜீவ னுக்கு உணர்ச்சி யுண்டாகுமாறு ஒவ்வொரு இந்திரிய வாயிலாய்ச் சென்று ஒவ்வொரு வாயிலாய் நுகரும் புலன்களைப் பெற்று அனுப விக்குமாறு அளவிடற்கரிய அம்சமான மானசமென்னும் ஆட்டங் கொண்ட ஓர் பொருளை யருளி, அப்பொருளைத் தனக்குள் அடக்கி யாளும் பொருட்டு அதற்கு மேம்பாடாகிய புத்தியென்னும் விஞ் ஞான சக்தியையும் சித்தம் அகங்காரம் என்னும் இரண்டினையும் ஆக நான்கு சக்திகளை உதவியிருக்கிறார்.

3-வது—புவனம். எண்ணிறந்த இத்தகைய ஜீவராசிகள் நிலை பெற்று வாழ்க்கை யெய்துமாறு பரப்பிடங்கொண்ட விலாசமான இப்புவனத்தை உண்டாக்கி உதவி யிருக்கிறார்.

4-வது—போகம். இவ்வாறுதவப்பெற்ற ஜீவர்கள் இன்பநலங் களை யனுபவிக்கும் பொருட்டு சகல சவுகரியமான வஸ்துக்களையும் அறுசுவை பதார்த்தங்களையும் ஐம்புலன்களாலு மொருங்கே துய்த்

தற் கேதுவான மாதர் போகமான *சிற்றின்பத்தையும் தனது நல் லுணர்வாகிய புத்தியைக் கொண்டு இத்தகைய போகங்களை நமக் குக் கொடுத்தவன் யாரென்று அறிந்து நாளுக்குநாள் அவனையே வழிபட்டு அதன் மூலமாய் அவனைக் கண்டு களித்தற்கேதுவான †பேரின்பத்தையும் அதற்குரிய அநேக நூன்மார்க்கங்களையும் ஆக வித்தகைய போகங்களை அருளியிருக்கிறார்.

ஆகவே இந்நான்கு உதவி சாதனங்களும் உலகத்துள்ள மாந் தர்க்கு ‡உள்ளங்கை நெல்லிக்கனி யென்றுணர்.

இதல்லாமல் விஞ்ஞானத்தினுற் காய சித்தியடைவதற்குரிய வனஸ்பதி முதலான சாதனங்களையும், மூடத்தனத்தினால் தாங்களே வருவித்துக் கொள்ளும் ரோகங்களை நிவர்த்தி செய்வதற்குரிய ஔடத சாதனங்களையும் அருளியிருப்பதை யாலோசிக்குங்கால் அது எவ்வளவு அபாரமான உதவி யென்பதை இதனால் நீ அறியக் கடவாய்.

கேட்டனையோ, சசிவர்ண! இத்தகைய பேருபகாரங்களைச் செய்தருளிய பெருமான் பெரிய திருவடிகளைப் பெரிதும் உவந்து

---

* சிற்றின்பமென்பது—

இருந்தராதலப்பரப்பிலிடுக்கண்மேலிடுக்க ணெய்தியிமைப்பில்வீந்து
வருந்துமானுடப்பிறப்பின்மங்கைநல் லாரொடுமயங்கிமகிழ்ந்துகோடல்
பருந்தின்வாய்ப்படுமரவம்பிடித்த மண்டூகங்கொள்பறவைச்செந்தேன்
அருந்துமாறொப்பதனுலாங்கது சிற்றின்பமெனலாயிற்றன்றே.

(மெய்ஞ்ஞான விளக்கம்)

பேரின்பமென்ப தொன்றுண்டென் றுணரும் பொருட்டே இச்சிற் றின்பத்தை யுண்டாக்கியதா மென்றுணர்க.

† பேரின்பம்—குறைவடையாது மேன்மேலும் வளர்ச்சி பெறுமோர் தெவிட்டாத இன்பநலமாம்.

‡ உள்ளங்கை நெல்லிக்கனி—என்பது பிரத்தியக்ஷக் காக்ஷி. அதாவது ஓர் பொருளைக் (புறத்தே) கண்ட மாத்திரத்தால் அப்பொருளின் அகத் துள்ள சகல வஸ்துக்களையும் நன்கு புலப்படுத்திக் காட்டுந்தன்மை. அதுநெல் லிக்கனி ஒன்றற்கே யுரித்தாதலால் உள்ளங்கை நெல்லிக்கனி யென்பர். இந் நெல்லிக்கனியின் மேனோக்கத்தாலேயே அதன் உள்ளிருக்கும் தெளிந்தரசம் பளபளப்பான நரம்புத் தாரைகள் செவ்வனே காணப்படுவதுமன்றி அந் நெல்லிக்கனியின் மீதுள்ள கோடுகளின் எண்ணிக்கையே அதன் வித்துக்கு முள்ளது சத்தியமாதலால் இதனை விசேடித்துச் சொல்லப்பட்டது. வட நூலோர் இதனை கரதலாமலகம் என்பர். அதாவது கரதல+ஆமலகம்=உள் ளங்கை+நெல்லிக்கனி யென்பது. இது உலகவழக்கு.

சீதாராமாஞ்சநேய நூலின் உரையாசிரியர் மேற்கண்ட வாக்கியத்தைக் கரதல+அமலம்+கம்=எனப்பிரித்து அதற்கு உள்ளங்கையிலுள்ள பரிசுத்த மான ஜலம் என்று வியாக்யானம் செய்திருக்கிறார்.

பேரறிவடைந்து முற்கூறிய சகல இகபோகங்களையும் துறந்து இறைவன் திருவடியே மெய்யின்பெனக் கருதி மேற்சொல்லிய நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகமுத்திரார்த்த பலபோக விராகம், சமாதி சட்க சம்பத்தி இவைகளை யடைந்து தாகங்கொண்டவன் ஜலத்தைத் தேடிச் செல்வதுபோலும் மிக்க பசியால் வாடுவோன் அன்னத்தைத் தேடிச் செல்வதுபோலும், இப்புவன போகங்களிற் புரளுவோன் தம் புத்தியால் கர்த்தவ்யமான கடவுளையடைய முயல வேண்டும். இதைத்தான் மோக்ஷ இச்சையென்றும் முமுக்ஷுத்வம் என்றும் சொல்லப்படும் என்றறியக்கடவாய் என்றனர் மாநந்தி பாராயண முனிவர்.

இவ்வைபவங்கள் அனைத்துங் கேட்ட சசிவர்ணன் குருவின் திருப்பாத மலர்களைக் கும்பிட்டு, கும்பிட்டு, ஹே! மோக்ஷ சாம்ப்ராஜ்ய ஜன்மரகித மார்க்கோபதேச மூலகாரண முனிபுங்கவ; ஹே! சாந்த தபாபர; சச்சிதானந்த ரூப; ஹே! கருணாலய கர்த்தவ்ய ஹிருதய நிட்களங்க; ஹே! ஹிருதய லோகப்ரகாச!

தேவரீர் இதுகாறும் திருவாய் மலர்ந்தருளிய இதோபதேச ரகசியங்களால் யான் கடைத்தேறு மார்க்கமுடையே னாயினேன், ஆயினும் தேவரீர் திருவருளை முன்னிட்டு ஓர் விடயம் கேட்க விரும்புகிறேன். தயை செய்வீரேல் அதனை வெளிப்படுத்திக் கொள்ளுவேன் குணபரனே, யெனச் சசிவர்ணன் கூறக் கேட்ட குருமூர்த்தியார் அங்ஙனமே விடையருள, அதைக்கேட்ட அவ்வந்தணன் அறைவதானன்.

சுவாமி சாதனமின்றி யொன்றைச் சாதிப்பாருலகிலில்லை என்பது போன்று உலகில் ஒவ்வொருவரும் இத்தகைய சாதன சதுஷ்டயங்களை யடைந்து அதன் பின்னரே மோக்ஷாபேக்ஷைக்கு அருகர் ஆவரென்றும் இச்சாதனமடையாத ஏனையோர் மோக்ஷத்திற் குரியரல்லர் என்றும் தேவரீர் திருவாக்கால் வெளியாகிறது.

ஆகையால் இச்சாதனங்களை யடைந்த ஒவ்வொருவரும் மோக்ஷாபேக்ஷை யடையும் பொருட்டு எவ்வாறு முயலவேண்டும். அதற்காக என்ன செய்யவேண்டும். அந்தப்படி செய்யப்போகுமிதன் மத்தியி லேதேனு மிடையூறுகளுண்டா வென்பதை விளங்க வுரைக்க வேண்டுமெனத் தாளில் விழுந்திறைஞ்சிய விப்பிரனைத் தன்னிருகரங்களாலும் தழீஇத் தண்ணமுத நிறைந்த தம் திருவாக்காற் சாற்றுவதானார்—தவமுனிவர். (தொடரும்)

நற்றுணை

இவ்வுலகிலே முற்றத்துறந்த முழுஞானிகளைத்தவிர மற்றை யோர் யாவரும் துணையோடன்றித் தனித்துவாழ விரும்பமாட்டார் கள். ஆதலினாலே நாம் ஒவ்வொருவரும் துணையோடேயே வாழ விரும்புவோம். துணையாவது யாது எனின் சுற்றத்தார், மனைவி, மக்கள், செல்வம் ஆகியவெலாம் துணையெனப்படும். ஆயினும் இத் துணைகளெல்லாம் இம்மையிலேயே நம்மை விட்டொழியும். (அற நெறிச்சாரம்)

"ஈட்டியவொண்பொருளுமில்லொழியுஞ்சுற்றத்தார்
காட்டுவாய்நேரேகலுந்தொழிவர்"

என்றபடி இம்மையிலேயே ஒழிந்துபோவதான இத்துணைகளை யெலாம்விட்டு இம்மை மறுமைக்கு ஏதுவாகிய நற்றுணையை அடைய வேண்டும். ஏன் நமக்கு நற்றுணை வேண்டுமெனின்.

"துணையோடல்லது நெடுவழியேகேல்"

என்றபடி நாம் நல்வழியிற் செல்லவேண்டுமாயின் நற்றுணையுடனே செல்லல்வேண்டும். —நற்றுணையாவது யாது எனின் திருவள்ளுவர்,

"நல்வினைத்தினூங்குந் துணையில்லை
தீயினைத்தினல்லற் படுப்பதுமில்லை"

என்றும், நவமணியினும் அருமணியெனப்போற்றத்தக்க சூத்திரங் களை நமக்கீந்த நம்மருமை மூதாட்டியாகிய ஔவையாரும்,

"பெரியாரைத் துணைக்கொள்"

என்று கூறி அதற்கடுத்து மறுமைக்கேதுவாகிய,

"பேதமை யகற்று"

என்று கூறினார். ஆதலின் பெரியோரே நமக்கு இம்மை மறுமைக்கு ஏற்ற நற்றுணையென்பது புலப்படுகின்றது.

"இம்மையடக்கத்தைச் செய்துபுகழாக்கி
உம்மையுயர்கதிக்குய்த்தலான்—மெய்ம்மையே
பட்டாங்கறமுரைக்கும் பண்புடையாளரே
நட்டாரெனப்படுவார்" (அறநெறிச்சாரம்)

"முத்திக்குவித்தாகு முழுதுணர்ந்தார் பெருநட்பே
திக்திக்குநாடோறுந் தேவர்பெறற்கருந்திருவும்
சித்திக்கும்படியருளுஞ் செப்பரிதால்"

என்றதனுணர்க. பெரியோரை நாம் தெரிந்து கொள்வதற்கேற்ற வழியைப்பற்றி,

"அருளுடையோரைத் தவத்திற் குணத்தி லருளி லன்பில்
இருளறுசொல்லினுங் காணத்தகும்"

என்று பட்டினத்தடிகள் கூறியவண்ணமே அயோத்திநகர்க் கரசனாகிய தசரதனுக்கு மூத்தகுமாரனாகிய ஸ்ரீராமன் தனது சிறிய தாயாகிய கைகேயிக்குத் தனது தந்தை கொடுத்திருந்த இரண்டுவரங்களை நிறைவேற்றுவதன் நிமித்தம் அக்கைகேகியின் மகனான பரதன் அரசாளுமாறு இராச்சியத்தைத் தான் ஏற்றுக்கொள்ளாது விட்டு பதினான்குவருடம் வனவாசஞ்செய்ய உடன்பட்டு மனைவியான சீதையோடும் தம்பியான இலக்குமணனோடும் கங்கைத்துறையை யடைந்து கங்கையில் ஓடம்விடுபவனும் ஆயிரம் ஓடத்துக்கு தலைவனும் கங்கைக் கரையிலுள்ள சிருங்கிபேரபுரத்திற்கு அதிபதியுமாகிய குகனை நட்புக்கொண்டு இங்கு இரு என்று அவன் கொணர்ந்த காணிக்கைகளையும் உகந்து, யாதினும் இனிய நண்ப, நம்முடன் இரு என்றும் என் மனைவியான இந்தச் சீதை உன்தோழி, என்தம்பி இலக்குமணன் உன்தம்பியே, என்றும், நீ எனது உயிர்த்தோழன், என்றும் இதுவரை நாங்கள் உடன் பிறந்தோர் நால்வராயிருந்தோம். இப்பொழுது உன்னுடன் ஐந்துபேராயினோம், என்றும் ஒற்றுமை நயந்தோன்றக்கூறியது தானே இனிதுவிளங்கும்.

(இன்னும்வரும்)

மனிதர் சிகையும் பிரார்த்தனையும்

நமது நாட்டில் நமது வேதப்படி கடவுள் ஒருவரேயென்றும், அவர் ரூபாரூபங்களற்றவரென்றும் எங்கும் நிறைந்தவரென்றும் யாவருமறிவாரேனும் அவரைப் பல மூர்த்தங்களாய் ஆராதிக்கும் வழக்கம் ஆதிகாலமுதல் இருந்து வருவது யாவருமறிந்த விஷயமே. இந்த மூர்த்தங்களில் ஆண்பெண் இரண்டுமுண்டு. ஜனங்களுக்கு வியாதியாவது வேறு எவ்வித கஷ்டமாவது நேர்ந்தால் அம்மூர்த்தங்களில் தமக்குப்பிரியமான ஒருமூர்த்தத்திற்கு பிரார்த்தனைசெய்து கொள்வது வழக்கம். அதாவது அந்த ஆபத்து நீங்கின் உனக்கு ஒருவீசை கற்பூரம் கொளுத்துகிறேன் என்று சொல்லிக்கொள்வது. கால்நோய் நீங்கினுல் வெள்ளியிலோ பொன்னிலோ காலைப் போல்செய்து கொண்டுவந்து கோயில் உண்டியில் போடுகிறேன் என்று இவ்வாறு பலவித பிரார்த்தனைகளுண்டு. அவற்றில் தலைமுடியைக் கொடுக்கிறேன் என்பது ஒன்று. இதுவிசேஷமாய் பிரா

ணுபத்து நீங்குவது, புத்திரப்பேறடைவது இப்படிப்பட்டவற்றிற்கே முடிகொடுப்பதாய் பிரார்த்தனை செய்துகொள்வது.

இக்காலத்தில் ,சிலர் இதைப்பற்றி மிக்ககேவலமாயும் ஏளனமாயும் நினைக்கிறார்கள். கடவுளுக்குக் கேவலம் நமது உரோமத்தையா கொடுப்பதாய்க் கூறுவது என்று கேட்கிறார்கள். அம்மாதிரி பிரார்த்தனை செய்கிறவர்கள் தங்கள் சிரமுடியை யவ்வளவு கேவலமாய் நினைத்தா அப்பிரார்த்தனையைச் செய்கிறார்கள் என்று நாம் யோசித்துப்பார்த்தால் அந்த உண்மைவிளங்கும். அவரவர்கள் தேசாசாரப்படிக்கும் மதாசாரப்படிக்கும் ஒருவகுப்பாரால் பரிசுத்தமாய்க்கருதப்படும் ஒருவஸ்து மற்றோர்வகுப்பாரால் அபரிசுத்தமாய்க் கருதப்படுகிறது. ஒருவகுப்பாரால் மிக்க உயர்வாய்க் கருதப்படும் வஸ்து மற்றொரு வகுப்பாரால் மிகத் தாழ்வாய்க் கருதப்படுகிறது. திருட்டாந்தமாய் ஹிந்துக்கள் பசுவின் சாணத்தையும் கோசலத்தையும் மிக்க பரிசுத்தவஸ்துக்களாய் மதிக்கிறார்கள். அவை தேகத்தில் பட்டால் அசுத்தம் போய்விட்டதாய்க் கருதப்படுகிறது. மஹம்மதியரோ அவர்கள் மதாசாரப்படி சாணம் உடையில் ஒரு அங்குல அகலத்திற்குப்பட்டுவிட்டால் அந்தவிடத்தைப் பலதரம் அலம்பினால்தான் அந்த அசுத்தம் நீங்கும். அவ்வாறு சிலவஸ்துக்களுக்கு தேசாசாரமுதலியவற்றால் மதிப்பில் தாரதம்மியமிருந்தாலும் மனிதருடைய சிரமுடிக்குமட்டும் பெரும்பாலும் எல்லாச்சாதியிலும் எல்லாநாட்டிலும் கௌரவமேயுண்டு. அதிலும் ஸ்திரீகளுடைய கூந்தலுக்கு எங்கும் அப்படியே. ஒரு ஸ்திரீ தன்கூந்தலை யெவ்வளவோ சிறப்புடையதாகவும் தன்வனப்பிற்கு முக்கியகாரணமானதாகவும், மதிக்கிறாள். கவிவாணர் ஒரு ஸ்திரீயின் வனப்பை வர்ணித்துக் கூறும்போது முதலாவதாகக் கூந்தலையே பலவாறு அலங்காரப்படுத்திக் கூறுகிறார்களென்பதே யிதற்குப்போதுமான அத்தாட்சி. நமது நாட்டு ஆடவரும் தம்சிகையைத் தம்வனப்பிற்கு ஓர் அங்கமாகவே மதிக்கிறார்கள். காலக்கேட்டின்படி இப்போதுதான் ஆடவரிற் சிலர் அரைமொட்டை கால்மொட்டை 'முக்கால்மொட்டைகளாயிருக்கிறார்கள். முற்காலத்தில் நமது நாட்டு ஆடவர் அப்படி யிருந்திருக்கவில்லை. அக்காலங்களில் ஒரு ஸ்திரீ ஒரு தகாதகாரியத்தைச் செய்வாளேயானால் அவள் சிரசை முண்டிதமாக்குவதே அவளுக்கு விதிக்கக்கூடியமிக்க அகௌரவமான தண்டனையாய் இருந்தது. ஒரு ஸ்திரீ தன் ஆஸ்தி முழுமையும் இழந்து விடுவதாயினும் தன்கூந்தலை

யிழக்கமட்டும் சம்மதிக்கமாட்டாள். அவ்வளவு விசேஷமானதாய் மதிக்கப்பட்டபடியால்தான் கடவுள் விஷயத்தில் செல்வத்தைக் கொடுப்பதைவிட சிரமுடியை யிழந்துவிடுவது மிக்க அருமைச் செயலாய்க்கருதப்பட்டது. கடவுளுக்கென்று அர்ப்பணம்செய்யப்படுவது முதல் அச்சிகைக்கு மிக்க மரியாதையும் பூஜிதமும் உண்டு. அதை மிக அருமையாகவும், சுத்தமாகவும் பாவித்து, அதற்கு வாசனைத் தைலம் முதலியவையூட்டி அது நன்றாய்ச் செழித்து வளரும்படி மிக்க சிரத்தை யெடுத்துக்கொள்வார்கள்.

கொடுப்பது சிகைமட்டுமேயாயினும் அதற்காகச் சந்நிதியிருக்கும் இடத்திற்குச் செல்லவும், அங்கு ஆகவேண்டிய சடங்குகளைச் செய்யவும் யாவற்றிற்கும் தக்கபடி தேகசிரமையும் பொருட்செலவும் இருக்கின்றன.

பிறகு இவர்கள் கொடுக்கும் சிகையால் பொருள் கொடுப்பதைப் போல் சந்நிதிக்கு ஏதேனும் பயனிருக்கிறதோவெனின் அதுவும் இல்லாமலில்லை. இவர்கள் கொடுக்கும் சிகைகளில் விசேஷமானவை கறுத்துநீண்டு செழித்துவளர்ந்திருக்கின்றன. கோயில் அதிகாரிகள் வருடாவருடம் அவற்றை வர்த்தகருக்கு விற்றுவிடுகிறார்கள். வர்த்தகர் அவற்றை வாங்கிச் சுத்தம்செய்து சிறுசிறு சிகைமுடிச்சுகளாக்கி குறைவான கூந்தலுடைய ஸ்திரீகள் தலையில் வைத்துக் கொள்ளவிற்கிறார்கள். இதன்றி பொய்ச்சிகைகள் செய்யப்படுகின்றன. இவை மேல்நாட்டில் மிக்க உபயோகமாகின்றன.

இவ்விதப் பிரார்த்தனை திருப்பதி, திருத்தணிகை, பழனி, ஸிம்மாசலம் முதலிய ஸ்தலங்களிலும் தென்னாட்டிலுள்ள இன்னும் அனேக ஸ்தலங்களிலும் அதிகமாய் நடக்கிறது. சில காலத்திற்குமுன் ஸிம்மாசலம் ஸ்தலத்தில் (விசாகப்பட்டணத்திற்கருகில்) 4,318 பவுன் எடையுள்ளமுடிகள் ஏலத்தில்விற்கப்பட்டன. அதனால் கோயிலுக்கு ரூபா 2,050 கிடைத்தது. ஓர் ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனியே அதை வாங்கியது.

அனேக விஷயங்களுக்குக் காரணம் புலப்படாததாலும் அவற்றாலுண்டாகக்கூடிய பயன் என்னவென்பதை ஆய்ந்து யோசிக்காத குறைபாலும் சிலர் நமது முன்னோருடைய ஆசார ஒழுக்கங்களையெல்லாம் மிக்க அலட்சியமாய்க் கூறுகிறார்கள். நமது முன்னோர் செய்திருக்கும் ஏற்பாடுகள் பயனற்றவையல்லவென்பதற்கு இஃதோர் திருட்டாந்தமாகும்.

உள்ளப்பரிசோதனை

நாம் ஒவ்வொருவரும் இப்போதிருக்கும் நிலைமையில் திருப்தி கொள்ளாமல் குறைவுகளை நீக்கி மேலான ஸ்திதியை அடைய விருப்பங்கொண்டவர்களாயிருக்கிறோம். இவ்விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள அநேக முயற்சிகளையும் செய்கிறோம். சிலசமயங்களில் நல்ல புஸ்தகங்களைத் தேடி வாசிக்கிறோம். உபந்நியாசங்கள் செய்கிறவர்களை நாடி அவர்கள் வார்த்தைகளை ஆவலுடன் கேட்கிறோம். மற்றும் சிலசமயங்களில் மௌனத்தில் காலங்கழிக்கும் பெரியோரென்று நம்மால் நம்பப்படுகிறவர்களிடம் போய் அவர் அருகே சும்மா உட்கார்ந்துவருகிறோம். இன்னும் அநேக விரதங்களை அநுஷ்டித்து பூஜைகள் செய்கிறோம், கடவுள்தியானம் செய்கிறோம். இவையெல்லாம் நல்லகாரியங்களே. இவைகள் ஒவ்வொன்றினாலும் நாம் ஏறக்குறைய பிரயோஜனத்தை நிச்சயமாய் அடைகிறோம். ஆயினும் நாம் மேம்பாடடைய மிகவும் முக்கியமான வேறு சில விஷயங்களையும் ஆராய்ச்சிசெய்து நம் ஒழுக்கத்தைச் சீர்திருத்த வேண்டிய தவசியமாகும்.

முதலாவது, நமக்கு உள்ளப்பரிசோதனை அத்தியாவசியமானது. இதைப் பூரணமாய் சுயவஞ்சனையின்றி செய்யும்வழக்கம் ஏற்படவேண்டும். மனம் வாக்கு காயம் என்கிற மூன்று அம்சங்களிலும் நம்நிலைமை எத்தன்மையது என்று நாம் சந்தேகமறத் தெரிந்துகொள்ளவேண்டும். பரிசோதனை செய்யுங்கால் "இஃதென்ன குற்றம். அற்பவிஷயந்தான்," "இது சுபாவத்திலேயே ஏற்பட்ட முக்கியமில்லாத கெடுதலேயொழிய ஒன்றும் பிரமாதமில்லை," "இது எல்லாருக்குமுள்ள குறைதான்" என்ற இம்மாதிரியான எண்ணங்களைமுற்றிலும் ஒழித்து நம் குற்றங்குறைகளை உள்ளது உள்ளபடியே அறியவேண்டும். அவைகளை நீக்கவேண்டிய தவசியமென்கிற தீர்மானத்துடன் பயம், அற்பசந்தோஷம், தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளுதல்முதலிய இடையூறுகளுக்குட்படாமல் சரிவர ஆராய்ச்சிசெய்வது நமது முதற்கடமை. ஏனென்றால் உள்ள ஆராய்ச்சி நம் வாழ்க்கை முழுவதையும் ஒழுங்குபடுத்த ஏதுவாகும். நாம்செய்யும் ஒவ்வொருகாரியத்திற்கும் பேசும்வார்த்தைகளுக்கும் உள்ளே உற்பத்தியாகும் எண்ணங்களே மூலகாரணங்கள். ஒரு மரத்துக்கும் அதிலுள்ள கிளை, இலை, பூ, காய் முதலியவற்றிற்கும் எப்படி வேரானது ஆதாரமாகின்றதோ அப்படியே நம்வாழ்க்கைக்கும் அதில்

வியக்தமாகும் எல்லா விஷயங்களுக்கும் நம் எண்ணங்களே ஆதாரம் என்பதற்கு கொஞ்சமும் ஐயமில்லை. ஆகையால் எண்ணங்களைச் சுத்தமாகவும் பலமாகவும் செய்துகொண்டால் வார்த்தைகளும் செய்கைகளும் தானே சீராகிவிடும். ஒரு ஊரணியிலுள்ள அசுத்த மண்முதலிய கெடுதல்களை நீக்கிவிட்டால் அதிலிருந்து போய் எங்கும் பிறருக்கு உபயோகமாகும் வாய்க்காலிலும் நல்லஜலமே ஓட ஆரம்பிக்குமல்லவா ?

ஆயினும் சிலசமயத்தில் எண்ணமின்றி செய்கைகள் உற்பத்தியாவதுபோல் தோன்றும். அது தோற்றமேயொழிய உண்மையல்ல. ஒரு உதாரணத்தைக் கவனிப்போம். இரவில் படுத்து உறங்க ஆரம்பிக்கையில் மறுநாள் காலையில் 5 மணிக்கு விழித்துக்கொள்ள வேண்டுமென்று ஒருவன் தீர்மானித்து அந்த எண்ணத்தை மனத்தில் வற்புறுத்துவானுனல் அப்படியே அவன் அந்த மணிக்கு எழுந்திருக்கக்கூடும். இம்மாதிரி 5 அல்லது 6 தினங்கள் செய்துவந்தால் பின்பு படுக்கும்போது மேற்சொல்லப்பட்ட எண்ணம் இல்லாமலேயே காலையில் அதேகாலத்தில் விழித்து எழுந்திருப்பது வழக்கமாய்விடும். இதற்குக்காரணம் தேகத்துக்கு பயிற்சியான அப்பியாசமே. பிற்பாடு எண்ணத்தின் சம்பந்தம் வெளிப்படையாய் காணப்படாவிடினும் மேற்சொன்ன வழக்கத்துக்குக்காரணம் அவ்வெண்ணந்தான் என்பது உற்று ஆராய்ந்தால் தெரியவரும்.

உள்ளப் பரிசோதனைசெய்யுங்கால் ஞாபகம் வைக்கவேண்டிய விஷயங்களில் முதலாவது சாதாரணவிஷயங்கள், அசாதாரணமானவை முக்கியமானவை முக்கியமல்லாதவை என்கிற வித்தியாசம் பாராமல் எந்தவிஷயங்களைப்பற்றியும் நம் எண்ணங்கள் எப்படிப்பட்டவை என்கிற ஆராய்ச்சிவேண்டும். நம்வீட்டு ஊழியக்காரனை ஏவல்செய்யும்போது நாம் என்ன நினைக்கிறோம்? காய் இலை முதலிய சில்லறை பதார்த்தங்களை விலைபேசி அற்பவியாபாரிகளிடம் வியாபாரம் செய்யும்போது நம்மனத்தில் எம்மாதிரி எண்ணங்கள் இருக்கின்றன ? இடையனைக் கூப்பிட்டு நம்வீட்டிலுள்ள மாட்டினிடம் பால்கறக்கச் செய்யும்போது அவனைப்பற்றியும் மாட்டைப்பற்றியும் கன்றைப்பற்றியும் நாம் என்ன நினைக்கிறோம் ? ஸ்நானம் செய்யும்போது மனம் எங்கே சஞ்சரிக்கிற வழக்கம் ? அயலார் ஏதோ சுகத்தை யடைந்திருக்கப் பார்க்குங்கால் எம்மாதிரி எண்ணங்கள் மனத்தில் குடிகொள்கின்றன ? இவையெல்லாம் அற்பவிஷயங்க

ளாகத் தோன்றலாம். பலதுளி பெருவெள்ளம் என்கிற பழமொழிப் படி அற்பகாரியங்களில் நம் நடவடிக்கை எப்படியிருக்கிறதோ அதற்கு ஏற்றதாகத்தான் நம் குணநிசயம் உயர்வையோ அல்லது தாழ்வையோ அடையும். பிறரை ஒரு ஆபத்தினின்றும் காப்பாற்று வதற்கோ, அல்லது தேசத்தாரெல்லாம் பார்த்துப் புகழும்படியான ஒருபெரிய பரோபகாரமான காரியத்தைச் செய்யவோ எல்லாருக்கும் தருணம் வாய்க்காது. இம்மாதிரியான தருணங்கள் வாய்த்து அப் போது நாம் ஜாக்கிரதையாய் நடந்துகொள்வதைக்கொண்டே நம் குணம் அபிவிர்த்தி யடைவதென்றால் ஆயிரத்தில் ஒருவருக்குக்கூட அப்பாக்கியம் கிடைக்காது. ஆகையால் கொஞ்சங் கொஞ்சமாய் தினந்தினம் மனத்தின் சேஷ்டைகளை அடக்கி சன்மார்க்கத்தில் நம் வாழ்க்கையை ஈடுபடச் செய்யவேண்டுமானால் முன் குறிப்பிடப் பட்டவைப் போன்ற சாதாரண விஷயங்களில் ஜாக்கிரதையோடி ருந்து மனத்தை நம் வசப்படுத்தி ஆத்ம உத்தாரணத்தை மெல்ல மெல்ல அடைய முயற்சிப்பதுதான் வழி. இதை விட்டு பெருங்காரி யங்களிலும் வைதீக சம்மந்தமான விஷயங்களிலும் மாத்திரம் நாம் ஜாக்கிரதையா யிருந்தாற்போதும் என்று எண்ணுவது அறிவீன மாகும். அது சமுத்திரத்தில் அலை ஒய்ந்தபின் ஸ்நானம் செய்ய எண்ணுவது போலாகும். அற்பவிஷயங்களை அலட்சியஞ் செய்தல் அஸ்திவாரமின்றி கட்டடம் கட்ட முயற்சிப்பதை யொக்கும்.

உள்ளப் பரிசோதனையால் என்னபலன் என்பதைப்பற்றி சற்று கவனிப்போம். முதலாவது நம்மிடமுள்ள கெடுதல்கள் இன்னவை யென்று நன்றாய் தெரிந்துகொள்ளுகிறோம். மதாசாரியர்கள், பெரிய பக்தர்கள், அவதார புருஷர்கள் இவர்களைப்பற்றி நாம் தெரிந்து கொண்டிருக்கிற நற்குண நற்செய்கைகளை ஒத்திட்டுப்பார்க்க நம்மி லுள்ள கெடுதல்களுக்கு நேர்விரோதமான சீரான நன்மைகள் இன் னவை யென்று நமக்குப் புலப்படும். ஊக்கத்துடன் உள்ளப் பரி சோதனை செய்பவர்களாகில் நாம் உடனே அவ்விதமான நன்மைகளை நாமும் அடைய உண்மையில் தீர்மானிக்கிறோம். நாளுக்கு நாள் அத்தீர்மானம் பலப்படுகிறது. அது எப்படி வியக்த மாகிறதென் றால், காலையில் உள்ளப் பரிசோதனை செய்கிற அப்பியாசம் ஒருவ னுக்கு ஏற்பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். பிறகு பகல் முழுவதும் இரவில் படுக்கிறவரையிலும் அவன் நானாவித காரியங்கள் செய்ய ஏற்படுங் காலத்தில் அவன் காலையில் தீர்மானம் செய்துக்

கொண்டதைப் பற்றிய எண்ணங்கள் அவன் மனத்தில் சரியான சமயத்தில் தோன்றும். ஒரு சிநேகன்வந்து அவனைப்பார்த்து "காலையில் நீசெய்த தீர்மானம் என்ன ! நீ இப்பொழுது அதற்கு விரோதமான காரியத்தை வழக்கம்போல் செய்ய யோஜிக்கிறாயே ! உன் அறிவு என்ன அறிவு ! நீ உள்ளப் பரிசோதனையும் தியானமும் செய்ததின் பலன் என்ன ?" என்று இடித்துக்காட்டிச் சொல்வது போலிருக்கும். ஆனால் ஆரம்பத்தில் இந்த எச்சரிக்கையால் அதிக பயனிராது. அதை மீறி நடப்பதே சுலபமாதலால் அப்படியே நாம் செய்துவிடுவோம். நமக்குள் நன்னடக்கையை யடையவேண்டுமென்கிற ஊக்கம் வாஸ்தவமாயின் நாளடைவில் மேற்குறிக்கப்பட்ட எச்சரிக்கையின் பலம் ஓங்கி நமக்குப் பழக்கமான கெடுதல்களை விட்டு உள்ளப் பரிசோதனை காலத்தில் செய்த தீர்மானங்களுக்கேற்க நம் வாழ்க்கையை சீர்திருத்தி விடுவோம். கடைசியில் ஈஸ்வரனுடைய எல்லா திவ்விய குணங்களும் நமக்குள் பிரதிபலித்து அவரால் சிருஷ்டியின் முடிவான பலனாக பட்டிருக்கும் கதியை நிச்சயமாய்ப் பெறுவோம்.

ஆகையால் சகோதரர்களே, சகோதரிகளே! உள்ளப் பரிசோதனை என்னும் வழக்கத்தைக் கடைப்பிடியுங்கள். அது என்றும் நற்றுணைவனாகும். சன்மார்க்கத்தில் செல்ல அது அளவற்ற உதவி புரியும். எண்ணம் என்னும் கருவியை சுத்தமாகவும் பலமாகவும் வைத்துக் கொள்ளுங்கள். அது இகத்திலும் பரத்திலும் நமக்கு உண்மையான நன்மையை யளிக்க வேறெதையும் விட உத்தமமான கருவியாகும்.

மாணவர் பக்கம்

(83-ம் பக்கத்தொடர்ச்சி)

ஐரோப்பியர் கூடியவரையில் எப்போதும் உடைகளைப் பரிசுத்தமாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறுதான் உடுக்கவேண்டும் என்று நமக்கு ஆதியிலிருந்தே விதியிருக்கிறது. "கந்தையாயினும் கசக்கிக்கட்டு" என்று பழமொழியே யிருக்கிறது. அப்படியிருந்தும் நம்மவரில் அனேகர் அதையனுசரிப்பதேயில்லை. இவ்வாறு ஒருவரிடமுள்ள நற்குணத்தை விட்டு விட்டு, கோணல்களையும், நமக்குத் தகாதனவற்றையும் கற்றுக்கொள்வது அறிவில்லார் செய்கையேயாகுமன்றோ.

உடை சுத்தமாயிருத்தல் வேண்டும் என்பதும் தினந்தோறும் ஸ்நானம் செய்யவேண்டுமென்பதும் அனாதிகாலந்தொட்டே நமது முன்னோர் ஏற்

படுத்தியுள்ள விதிகள். மேலும் ஆற்றில் ஓடும் ஊற்று நீரில் ஸ்நானம் செய்வது தேகத்திற்கு மிக்க ஆரோக்கியமானதென்ற சுகாதாரவிதியும் நம்மவர்க்கு ஆதிமுதலே தெரியும். இப்போதும் நமது நாட்டில் அனேகர் தினந்தோறும் அதிகாலையில் துயிலெழுந்து ஆற்றிற்குச்சென்று வேஷ்டிகளைத் துவைத்துக் கொண்டு ஸ்நானம் செய்து வருவதைக்காணலாம். ஐரோப்பியரோ ஸ்நானம் செய்வதற்கே பிற்காலத்தில் கற்றுக்கொண்டவர்கள். முதல் முதல் ஐரோப்பாவில் ஸ்நானம் செய்யும் இடங்கள் ஏற்படுத்தப்பட்டதற்கு ஒருகாலமும் உண்டு.

உணவு:—உணவு விஷயத்தில் மேல் நாட்டாரிலும் நாம் எவ்வளவோ நாகரீகத்தில் மேம்பாடடைந்திருக்கிறோம். அந்த நாகரீகமும் அனாதிகாலமாயுள்ளது.

மேல் நாட்டார் சுமார் 2000 வருடங்களுக்குமுன் இயற்கையாய்க்கிடைக்கும் பண்டங்களைப் புசித்துக்கொண்டிருந்தார்கள். அதாவது இந்தியாவில் இராஜாங்கம் மனுநீதிதவறாது நடந்துவந்தகாலத்தில் இந்தியர் உயர்தரப் பட்டு முதலிய உடைகளைத் தரித்து, அறுசுவை யுண்டி யருந்தி செல்வவந்தராய் மாடமாளிகைகளில் வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் மேல்நாட்டார் மலைப் பொந்துகளிலும், குகைகளிலும் வசித்துக்கொண்டு, மரப்பட்டைகளையும், இலைகளையும் தேகத்தின்மேல் மூடிக்கொண்டு காட்டில் கிடைக்கும் காய்கனி கிழங்குகளையும், காட்டிலுள்ள மிருகங்களையும், கடலிலுள்ள மச்சங்களையும் பிடித்து அவற்றின் மாமிசத்தையும் புசித்துக்கொண்டிருந்தார்கள். மாமிசத்தைத் தீயில் வெதுப்பி அல்லது ஆடுமாடுகளின் பாலில் அவித்துத் தின்று கொண்டிருந்தார்கள். பிறகே பூமியைப் பண்படுத்தி தானியங்களை உற்பத்தி செய்யக்கற்றுக்கொண்டார்கள். ஆகையால்தான் இப்போதும் மாமிசமே அவர்களின் பிரதான உணவாயிருக்கிறது. பிற்காலத்தில் ருசிக்காக உப்பு மிளகு இவற்றைப் பொடித்து மாமிசத்தின்மேல் தூவிக்கொண்டு உண்ணத்தொடங்கினார்கள். அனாதி பழக்கத்தால் இப்போதும் அவர்கள் மாமிசாதிகளைப் பெரும்பாலும் பூரணமாய் அவிக்காமல் அரைவேக்காடு முக்கால் வேக்காடாகவே உண்பதைக்காணலாம். நாட்டுப்புர வாசிகளும் மிக்க எளியோரும் நாளைக்கும் உப்பு, காரம் சேர்க்காமலே மாமிசத்தைப் புசிக்கிறார்கள். மாமிசபோசனத்திற்கும், மரக்கறிபோஜனத்திற்கும் மிக்க தாரதம்மியம் உண்டு. நமது முன்னோர் நாம் ஆன்மஞானம் அடையும்பொருட்டு சத்துவ குணம் நிறைந்த அதிசூக்கும அறிவு நமக்கிருக்கவேண்டும் என்று கருதி கந்தமூல பலாதிகளே நமக்குச் சிறந்த போஜனமாகுமென்று விதித்திருக்கிறார்கள்.

மாமிசபோஜனந்தான் தேகத்திற்குப் பலத்தை யளிக்குமென்பது சிலர் அபிப்பிராயம். அநுபவத்தில் அதுமுழுதும் பிசகான அபிப்பிராயமென்றே தெள்ளிதின் விளங்கக்காணலாம். மாமிசபோஜனம் தமோகுண ஆகாரம். அக்குணம் மிருககுணம். தன்னை யறியாதபடி ஆத்திரம், கோபம் முதலிய

வற்றை யுண்டாக்கத்தக்கது. சாந்தத்தோடுகூடிய நீடித்தகாலமிருக்கத்தக்க பலத்தை அது ஒருபோது மளிக்காது. ஒரு திருட்டாந்தம் கூறுகிறோம்:—

சிங்கம் சதா மாமிசபட்சணம் செய்யும் மிருகராஜன். பலத்திற்கு எதுவும் அதற்கிணையில்லை. ஒரு இரிஷபத்தை அல்லது குதிரை, யானையை யொருநொடியில் கொல்லக்கூடியது. அந்த இரிஷபம், குதிரை, யானை இவைகள் மாமிசபட்சணியல்ல. புல்பூண்டு இலைகளைத்தின்னும் பிராணிகளே. இருக்கட்டும்: ஒருவண்டியில் 60 படி பிடிக்கக்கூடிய 12 கோணிப் பைகளில் அரிசியைநிறப்பி வண்டியிலேற்றி, அந்தவண்டியைச் சுமார் இரண்டு மைல் அகலம் மணல் வெளியாகிய ஒரு ஆற்றைக்கடந்து கொண்டுபோக வேண்டுமானால், மாடு, அல்லது குதிரை அல்லது யானையை அவ்வண்டியில் கட்டினால் நிதானமாய் இழுத்துச்சென்று அக்கரை சேர்க்குமென்பது யாவருமறிந்ததே. அதேவண்டியில் சிங்கத்தைக்கட்டி யோட்டினால் என்னசெய்யும்? நூறுகஜதூரம் செல்லுமுன் பெருமூச்செடுத்துக் கவிழ்ந்து படுத்துவிடும்.

கந்தமூலபலாதிகளும் நாம் புசிக்கும் தானியவகைகளுமோ அப்படிப் பட்ட உணவல்ல, சத்துவ ரசோகுண உணவு. சாந்தத்தையும் சுறுசுறுப்பையும் கொடுப்பதோடு அறிவைக் கூர்மையாக்கக்கூடியவை. மாமிசம் தேகத்தை வளர்த்து தமோகுணத்தை யளிக்கும். ஆன்மார்த்தஞானம் பெறுதற்கு உயர்தரமான புத்திநுட்பம் வேண்டும். அதையளிக்க மாமிசத்தினிடம் சத்தில்லை. உயிர் நீங்கியபின் மண்ணாகவேண்டிய சக்கைபோன்றதே மாமிசம். கந்தமூலங்கள் அப்படியல்ல. அவற்றில் ஜீவசத்திருக்கிறது. நாம் புசிக்கும் தானியங்களிடம் உற்பத்திசெய்யும் சத்து அடங்கியிருக்கிறது. ஒருநெல், துவரை, அவரை அல்லது பயறு, இதைப் பூமியில் நட்டால் அதினின்றும் ஓரறிவையுடைய ஒருசெடி உற்பத்தியாகும். இவற்றில் தேக பலத்தையளிக்கும் சக்தியும் இருக்கிறது. இவையாவுமறிந்தே நமது முன்னோர், சம்பாநெல், பயறு, கரும்பு (அதாவது சர்க்கரை, வெல்லம் முதலியவை) பால், பழம், கிழங்கு முதலிய சத்துவபதார்த்தங்களே சிறந்த ஆகாரம் என்று விதித்திருக்கிறார்கள். இப்போது மேல்நாட்டிலுள்ள சாத்திரவிற்பன்னர் அனேகர் மேற்படி உண்மைகளை யறிந்து தங்கள் நாட்டார்க்கு வெளியிட்டுவருகிறார்கள். அனேகர் மாமிசபோசனத்தை நீக்கிவிட்டு மிருக்கிறார்கள்.

மேற்கூறிய காரணங்களால் உணவு விஷயத்தில் நாம் அவர்களைப் பின்பற்ற வேண்டியதற்கு ஒரு காரணமுமில்லை.

சுத்தம் என்ற ஒன்றையும், காலக்ரமத்தில் போஜன மருந்தும் முறைமையையும் நம்மவரில் பெரும்பாலார் கவனிப்பதேயில்லை. மேல்நாட்டார் அவற்றில் மிக்க ஜாக்ரதை யெடுத்துக் கொள்கிறார்கள். ஒரு தினத்தில் இன்னின்ன காலத்தில் போஜனம் செய்யவேண்டுமென்றும், இன்னின்ன காலத்தில் சிற்றுண்டி யருந்த வேண்டுமென்றும் அவர்களுக்குள் ஒரு ஏற்பாடுண்டு. யாவரும் அதன்படியே நடப்பார்கள். போசனம் செய்யும் இடமும், போஜன

பாத்திரங்களும் மிக்க சுத்தமாய் வைக்கப்படும். மேல்நாட்டார் ஒருவர் வீட்டில் மாலை 5மணிக்குவிருந்து என்று அழைப்புப்பத்திரம் அனுப்பினுல், அந்த வேளைக்குச் சரியாய் யாவும் ஆயத்தமாய் விட்டிருக்கும். குறைந்தது 5 மணியடிக்க ஐந்து அல்லது 10 நிமிடமிருக்கும்போதே விருந்தினர் அனைவரும் வந்து விடுவார்கள். சரியாய் 5 மணிக்கு யாவரும் போஜனத்திற்கு உட்காருவார்கள். நம்மவர்களோ தாராளமாய் பகல் 11 மணிக்கு சாப்பாடு என்று சொல்லி விடுவார்கள். 11 அடிக்கும்போது அரிசி உலையில் ஏறும். காய்கறிகள் அரிவாளில் அறுபடும். சுமார் ஒருமணிக்கு விருந்தினர் ஒவ்வொருவராய் வருவார்கள். வந்தவர்கள் வராதவர்களுக்குக் காத்திருந்து முடிவில் 2 மணிக்கு முதல்பந்தி உட்காரும். அதாவது விருந்தென்றால் 3 மணி நேரம் உபவாசம் என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

கிரமப்படி போஜனம் செய்தால் தேகசுகம் கெடாதிருக்கும். நம்மவரோ இத்தகைய விஷயங்களைக் கவனிப்பதேயில்லை. உலக வாழ்க்கைக்கு அவசியமானது தேகசுகம். அதைக்காப்பாற்றிக் கொள்வதற்கு வேண்டிய விதிகளை யனுசரிக்க வேண்டியது அவசியம். இந்த விஷயங்களை மேல்நாட்டாரிடமிருந்து நாம் தெரிந்துகொண்டு அதன்படி நடப்பது நலமாகும். அதை விட்டு அவர்கள் உண்ணும் வஸ்துக்களை நாமும் உண்ண முயன்றால் அது மூடத்தனமேயாகும்.

நம்மவர்கள் மேடைகள்மேல் நின்று சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று பறையறைகிறார்களேயன்றி எதில் சீர்திருத்தமடைய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கவனிப்பாரில்லை. அன்னியரைப்போல் அரைவேடம் கால்வேடம் போட்டுக் கொள்வதும், நமது மாதரைச் சேலைகட்டிய ஆடவர்போல் சுயேச்சையாய்த் திரியவிட்டு விடுவதுமே சீர்திருத்தம் என்று எண்ணுகிறார்கள். அவ்வாறு ஒழுகும் தேசங்களில் ஸ்திரீகள் என்ன நிலைமையி லிருக்கிறார்களென்பதையும், நமதுமாதரை யவ்வாறு ஒழுகச்செய்தால் அன்றே அவர்கள் கற்பென்னும் சிம்மாதனத்தினின்றும் கீழே தள்ளப் படுவார்களென்பதையும், அதுவே பூர்வீகத்தி லிருந்திருக்கும் நமது நாட்டின் சிறப்பையும் பெருமையையும் அடியோடழித்துவிடு மென்பதையும் சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் அத்தகைய சீர்திருத்தம் வேண்டுமென்று கனவிலும் நினையார்கள்.

(தொடரும்.)

பெண் கல்வி.

பெண் கல்வியைப்பற்றி அறிவான்ற சான்றோர் பலர் பன்முறைகளில் அரிய பல வியாசங்களெழுதி யுள்ளாரெனினும், சீரியர் செய்ததையே சிறியரும் செய்வது மரபாகலான், யானும் அதைப்பற்றி பலவழுச் சொற்கள் புனைந்து ஒரு சிறு வியாசம் வரைதல் இழுக்காகாதென உன்னுகின்றேன். நிற்க,

மகளிர்க்குக் கல்வியை விலக்கிய ஆடவர் மதியிருந்தவாறு ! கல்வி யில்லாரிடம் என்ன நற்குணங் காண்டலிசையும் ? கல்வியில் லார்க்குங் கான விலங்குகளுக்கும் பேதமென்னே ? மிருகங்களுக்கும் மாந்தர் தமக்கும் எத்துணை பேதமுண்டோ அத்துணை வேறுபாடு கற்றார்க்கும் கல்லார்க்கும் இடையே உண்டு. அதுபற்றி யன்றோ " விலங்கொடு மக்களனையர் இலங்குநூற்—கற்றாரோ டேனையவர்." என்றனர் செந்நாப் புலமைத் திருவள்ளுவர். கல்வியற்ற மாந்தர் முகக்கண், புண் அதனையுடையார்க்குப் பெருந் துன்பத்தையே யுண்டாக்குமாறு துன்பமே விளைத்திடும் புண்ணன்றோ ?

கட்புலனுக் கிலக்காகாத அரும் பெருஞ் சத்திகளையும், நுண் மையி நுண்ணிய பொருள்களையும் அகக்கண் விளக்கத் தாலன்றோ காண்கின்றோம். அகக்கண்ணை வளர்ப்பது கல்வி (யைத்தவிர வேறில்லை) யினூங்கில்லை. சிற்றுயிர்க்குற்றதுணை கல்வியே என்று புலவர்கள் புத்தகம் புத்தகமாய் வரைந்துவைத்தனரே. இக்காலத் துங்கல்வியைப் புகழார் யாவரே யுலகில் ? கல்வியை இகழ்பவர் அரு கினமைபற்றி அதனைப் புகழ்தலை இவ்வளவோடு விடுவோம்.

இத்துணை மாண்புடைய கல்வியை ஆடவர்மட்டுமே விழைந்து (அடைந்து) மகளிரை யதற்கு அநருகர் என்றொதுக்கி, அவர்களி டத்து புவிப்பொறையும் மந்திரிமதியூகமும், பதிபத்தியும், தன்னை யடக்கியாளும் பேராற்றலும், கற்பும், சாந்தமும், இன்னோரன்ன பல வருங்குணங்களும் பொதிந்திருக்கவேண்டுமென்று நாம் எவ்வாறு எதிர்பார்க்கலாகும். கல்வியிலார்க்கு இவ்வருங்குணங்கள் எங்கிருந்து உதித்திடுவோ ஏழையறிகிலேன்.

அதா அங்கு, மக்கள் தேவர் நரகர் தமக்குள் பெண்ணுக்குப் பெண்ணும் ஆணுக்குஆணும் அநுதாபப்படல் இயற்கையன்றோ. பெண் தெய்வக் கோயிலிற் பெண்களே குழீஇனர். அம்மைகோவில் செல்லும் அத்துணைப்பெண்கள் சிவன்கோவில்களுக்கும் விஷ்ணு வாலயங்களுக்கும் செல்லார் செல்லார்; சென்றாலும் அம்மையாரது சந்நிதியில் அவர்தமக்கிருக்கும் பக்தியும் பரவசமும் சுவாமிசந்நிதி யில் நிகழாது. உலகீர்! பெண்ணுக்குப் பெண்ணிரங்குமாறு புருடர் இரங்கார்; அவர் ஒருக்காலிரங்கினும் பெண்மக்களுவகைப்பொருட் டென்க. இன்னணமாகவும் கலைமகள்மட்டும் பெண்களிடத்துக் கருணையில்லாது ஆடவர்வயின் அன்புகூர்தல் விந்தையினும் விந் தையே.

கல்விக்கியற்கையி லுரிமையாளரை உரிமையில்லாதவராகச் செய்த மாந்தர்தங் கொடுந்தன்மையை நினைக்குங்கால் ஊனும் உடலும் உளமும் உயிரும் ஒருங்கே பதைக்கின்றன. மகளிர் கற்றால் தம்மினும் மேம்பாடுறுவர் என்ற பொறாமையாலோ, தாம்செய்யும் அநியாயங்களை அறிந்துகொள்ளுவர் என்ற பயத்தினாலோ, இவ்வாடவர் மகளிர்க்குக் கல்வியை விலக்கினர் ?

மணாளன் மணாட்டியாம் இருவர்நோக்கமும் கண்ணிரண்டு மொன்றனையே காண்பதை ஒத்திருந்தாலன்றோ உலகவாழ்க்கையின் இன்பந்துய்த்திடுவர். இல்லாள் கல்வியில்லாளாயின் காட்டகத்தே வாழும் கடும்புலிக்குச் சமமாவள். கல்வி யறிவொழுக்கங்க ளொருங்கேயுடைய ஓராடவனொடு அவை யெட்டுணையுமில்லாவோர் பிணப் பெண்ணைப் பிணைத்து இல்லறம் நடாத்துகவெனப் பணித்தால் அவர் எவ்வாறு மனைவாழ்க்கை யெனனும் சகடத்தை (வண்டியை) நேர்மையாய் இழுத்துச்செல்வார்? (இல்லறம் என்னும் வண்டிக்கு புருடனும் மனைவியும் இரண்டு எருதுகளைப் போன்றவர்கள்) பெண்ணொருபக்கம் ஆணொருபக்கம் இழுத்தால் இல்லறம் என்னும் சகடம் எவ்வாறு செல்லும் ? அத்தேகத்தின் ஒரு பகுதியாம் "பெண்" கல்லாமை யென்னும் பாரிசவாயுவால் பீடிக்கப்பெற்றால் மற்றொரு பகுதியாம் ஆடவர் தாமும் ஆடுவதெங்கே பாடுவதெங்கே ? நடிப்பதெங்கே நொடிப்பதெங்கே ? ஓடுவதெங்கே நாடுவதெங்கே ? கூடுவதெங்கே யூடுவதெங்கே ?

நம் பாட்டிமாரும் பூட்டிமாரும், தாய்மாரும் அத்தைமாரும், மாமிமாரும் மனைவிமாரும் கல்வியறிவிற்குத் தூரமாயிருக்கும் வரையில் நாம் படித்தபடிப்பும் நொடித்த நொடிப்பும் கண்ணெச்சில் பரிகாரமே யாகுங்கண்டீர். பூர்வீக இந்தியர் செய்ததையே பற்றுக்கோடாகப் பிடித்து நாகரிகமலையைத்தொத்தித் தத்தியேற வெததனிக்கும் நம்மனோர் பண்டை யிந்தியாவின் உண்மை நிலையறியாததேனோ ! உத்தமோத்தமியாயிருந்தும் பிரமசாரிணியாகவே காலங்கடத்தி ஆன்றோர்தழுவிய சான்றோர்குழுவிய மேதாவியிற் குழாம் புகழ் மேதாவியர் வாழியபொன்னே! வாழியமின்னே! வாழிய மணியே ! வாழியசுகமே !" என்று யாண்டும் வாழ்த்தெடுப்ப வாழ்ந்த "கார்க்கி" யம்மை கல்லாதவரா? யாக்ஞவல்கியர்தோள் சேர்ந்து அக்காலத்து இருடி கணங்களெல்லாம் அட்டாங்க சாட்டாங்கமாகத் தம்மைசேவிக்கநின்றவராகிய அம்மை "மைத்திரேயி" கல்லாதவரோ? கல்வியிற் சிறந்த சீதையை நோக்குதி. அன்னங்கண்ட தமயந்தியின் நிலை யென்னை ? காலகாலனைக் கற்பாலடைந்து காலனை வென்று துணைவனை மீட்ட பதிவிரதை சாவித்திரியின் சரிதம் ஓதுக. தென்னிந்தியாவில் தெய்வத்தன்மை பொருந்தி தெய்வங்கள் வணங்க விளங்கிய "ஔவை" மூதாட்டியே அருஞ்சான்றன்றோ? சுத்தவீரர்

களும் பெயரைக் கேட்ட மாத்திரத்தானே குலை நடுங்கும் பராக்கிரமம் பூத்து விளங்கின "அல்லி" யிருந்தநாடும் வாழ்ந்தநாடும் தென்னவன் ஆண்ட பாண்டி நாடாமே. மீனும்பிகையின் மேதகவுடைமை எனோ நங்காலத்துக் கூழை மதிகள் ஓர்கின்றாரில்லை ?

"ஆனால் தற்காலத்தில் ஸ்திரீகள் கல்வி பயிலவில்லையா ?" என்று வினவுவர் சிலர். அவர்கள் இப்போது படிக்கும் படிப்பை யொரு படிப்பாக வெண்ணிடவுஞ் சொல்லற்க. அற்பப்படிப்பு எப்போதும் ஆபத்தே விளைத்திடும். வண்ணான் கணக்கெழுதவும் அரிசி புளி மிளகாய் கணக்கறியவும், தனிவழி யோடவும், கூத்தை நாடவும், கொக்கரிக்கவும், இதர மாதரை யகந்தைகொண்டு அவமதிக்கவும் உதவும் படிப்பும் ஒருபடிப்பா ? ஸ்திரீகள் அறிவை வளர்த்து ஆஸ்திக புத்தியை யதிகரிப்பித்து, சமய உண்மை தப்பாதுணர்வித்து அன்னிய ஆடவர்க்கு அன்னையாய்த் திகழ்விக்குங் கல்வியன்றோ நம் பெண்மணிகளுக்கு வேண்டும். இன்னும் கற்பென்னும் பதத்திற்குக் "கல்" என்பதன்றோ பகுதி.

அன்னணம் படித்தற்கு வேண்டிய சௌகரியங்களில்லை யென்பது தெரிந்த விடயமே. ஒவ்வொரு நங்கையின் கணவனும் தகுதியான நன்னடையிற் பயிலாநு தன் மனையாட்டிக்கு நலவொழுக்கத்தையும் அரிய நாலுணர்ச்சிகளையும் உண்டுபண்ணினு னென்னில் நம் பெண்கள் உன்னத நிலையடையலாம்.

ஓம் தத்ஸத்.

இது யானெழுதிவரும் கௌரீசங்கரன் என்னும் நவீனகத்தில் எடுத்தெழுதப்பட்டது.

ஸ்திரீகள் பக்கம்.

(91-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு மருமகளே ஆரம்பத்தில் பொறுமையோடும் எச்சரிக்கையோடும் நடந்துகொள்ளவேண்டும். இதனால் புருடனுக்கு மனைவிமேல் திருப்தியும் சந்தோடமுமுண்டாவதோடு மாமியார் குரூரமானவளாயிருந்தாலும் மருமகள் நடக்கையைக்கண்டு அவள் மனம் கரைந்துவிடும். வயது முதிர்ந்தவர்களுக்குப் பெரும்பாலும் திடபுத்தி யிராதென்பதையும் அந்தக் கரணங்கள் பலவீனப்பட்டிருக்கு மென்பதையும் யோசித்து மருமகளே மேற்கண்டவாறு நடந்துகொள்ளவேண்டும். தாய்மார்கள் தம் புத்திரிகளுக்கு இப்புத்திமதியைப் புகட்டுவதில் சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டும்.

இனி மாமிமார் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளைக் கூறுவாம்:—

மாமியார் மருமகளைத் தன் மகளென்றே கருதவேண்டும். அப்படிக் கருதி நடக்கவேண்டியதே விதியாயிருப்பதோடு அவசியமாகவும் தனக்கே அனுகூலமானதாகவு மிருக்கிறது. ஏனெனில், ஒரு ஸ்திரீயின் புத்திரி

பருவகாலம்வந்ததே மணம் புரிந்துகொண்டு தன் கணவன் மனைக்கேகி விடுகிறாள். ஆகையால் வயோதிககாலத்தில் ஒரு ஸ்திரீக்கு அருகிலிருந்து உபசாரம் செய்ய உதவுபவள் மருமகளே யாகும். இப்போது தனக்குக் கொஞ்சம் தேகபலம் இருக்கிறதால் மருமகள் உதவி வேண்டியதில்லை யென்றெண்ணி அவளைக் கொடுமையாய் நடத்தித் தன்மேல் வெறுப்புண் டாகும்படி செய்துகொண்டால் பிற்காலத்தில் தனக்குக் கண்மங்கலடைந்து, நடக்கச் சக்தியின்றி தள்ளாடிக்கொண்டிருக்கும்போது அந்த மருமகளுடைய உதவியெவ்வளவு வேண்டியிருக்கு மென்பதையும், அவளுக்குத் தன்மேல் வெறுப்புண்டா யிருந்தால் அவள் எப்படி தனக்கு உதவிசெய்து உப சரிப்பா ளென்பதையும் சிந்திக்கவேண்டும். மேலும் தாய்க்குப் புத்திர வாஞ்சையினும் மேற்பட்ட வாஞ்சைகிடையாது. அத்தகைய, தன் உயி ருக்குயிரான புத்திரனுடைய வாழ்க்கைத் துணைவியல்லவா மருமகள். தனக்குப்பின் தன் புதல்வனுடைய க்ஷேமத்தைப் பாதுகாக்கவேண்டியவ ளல்லவா. தன் பெற்றோர் சுற்றத்தார் அனைவரையும்விட்டுத் தன் ஆதரனை யில் வந்திருப்பவளல்லவா. ஆகிய யிவற்றையெல்லாம் சிந்தையில்வைத்து மருமகளை யன்போடு நடத்திவரவேண்டும். கண்டிப்பதிலும் கருணையோடு கண்டிக்கவேண்டும். ஒருசமயம் மருமகள் ஒரு ஆழாக்கு அரிசியே வியர்த்த மாய்ப் போகும்படி செய்துவிட்டாள் என்று வைத்துக்கொள்வோம். அப் போது மாமியார், "அம்மா நீ கொஞ்சம் ஜாக்கிரதையா யிருந்திருந்தால் வீணாய் இந்த நஷ்டம் நேரிடாதே. இது உனக்குநேரிடும் நஷ்டந்தானே. உன் சொத்தல்லவா சேதமாயிற்று. நீ வீட்டிற்குப் புதிதாயிற்றேயென்று நான் இதைக் கவனிக்கிறேன். இன்றேல் இன்னும் குடும்பவிஷயத்தைப் பற்றி நான் கவனிக்கவேண்டிய அவசியமில்லையே. நீங்கள்கொடுக்கும் ஆகாரத்தைப்புசித்துக் கடவுளைத் துதித்துக்கொண்டு காலத்தைப் போக்க வேண்டிய தல்லவோ இனி யெனக்குள்ள வேலை ....." என்று இவ்வாறு கூறுவதால் மருமகளுக்கு குற்றம் மனதில் உறுத்துவதோடு மாமியார்மேல் வெறுப்புண்டாகாது. அதைவிட்டு ஆழாக்கு அரிசியோடு குடியே முழுகி விட்டதுபோல், காளியைப்போல்சீறி, "அடிமூதேவி, என்குடியைக்கெடுத்து கட்டிச்சுவராக்கவென்று உன்னை யெந்த அறுதலிமுண்டை எனக்கென்று பெத்துவைச்சாளோ, ஆத்தாவீட்டிலிருந்து சாலைசாலையாய்க் கொண்டுவந்து சாச்சுட்டியோ ? அங்கே அகங்கையும் புறங்கையும் நக்கிக்கொண்டிருக்காளே தெரியாதோ, மாப்பிளை வீட்டிற்குவரவே கண்ணுமண்ணு ஒண்ணும் தெரிய லியோ......" என்று இவ்வாறு பேசினால், அந்தோ! மருமகளுக்கு எப்படி மாமியார்மேல் வெறுப்புண்டாகாதிருக்கும்.—மருமகள் தாய்தந்தையர் யாவ ரையும் விட்டுவிட்டு நமது ஆதரனையில் வந்திருப்பவள். உலக அனுபவ மறி யாச் சிறுவயதுடையவள். ஆகையால் நாமே முதலில் பொறுமையோடு அவள் தெரிந்தும்தெரியாதும் செய்யும் குற்றங்களைச் சகித்துக்கொண்டு அவ ளைப் பட்சத்தோடு நடத்திவந்தால் அவள் எப்படியும் நம்மைத் தாய்போல் நடத்துவாள் என்று மாமியார் சிந்தித்து நடத்தல்வேண்டும்.

இவ்வாறு மாமி மருமகள் இருவரும் நடந்துகொண்டால் அல்லது இரு வரில் ஒருவரேனும் நடந்துகொண்டால் குடும்பத்தில் ஒற்றுமையும் சந்தோ ஷமும் நிலையாய் ஏற்படும் என்பதில் ஐயமின்றாம். எப்போதும் சச்சரவு செய்யும் இருவரில் ஒருவர் பொறுமையாயிருந்தால் அச்சச்சரவு நீடிக்கிறாது. ஒருவர் நம்மேல் காரணத்தோடோ காரணமின்றியோ கோபம்காட்டும்போது, நாமும் கோபம் காட்டினால் படிப்படியாய் வார்த்தைகள்முற்றி விரோதம் ஏற்பட்டு நிலையான பகையுண்டாய்விடுகிறது. ஒருவர் பொறுமை காட்டி

ஹல்,மற்றவர் எத்தகைய முறட்டுக்கோபமுடையோரேனும் அடங்கி விடுவார்கள். எப்போதும் கோபத்தைச் சாந்தம் வெல்லும்.

(தொடரும்)

ஜ்வோற்பத்தியும்—அவற்றின் சிகிச்சையும்

(89-ம் பக்கத்தொடர்ச்சி)

சாதாரணமாய் சன்னி பாதசுரம், அதிசாரசன்னி பாதசுரம் இவைகள் தவிற மற்றவித சுரங்களுக்கு முதலில் மலம்தள்ளும் ஔடதத்தை உபயோகித்தல்வேண்டும். சுரமுள்ளகாலங்களில் அதிகமாய் பேதியாகக்கூடிய ஔடதம் உபயோகித்தலாகாது. அன்றியும் கடின ஆகாரங்களைக்கொடுத்தலும் ஆகாது. சுரங்களில் பலவிதமிருப்பதால், முதலில் சுரம் இன்ன காரணத்தாலுண்டானதென்றும் இன்னசுரமென்றும் தெரிந்துகொண்டபின் சிகிச்சைசெய்யும் காலத்தில் மருந்துகள் இலகுவானவையாகவும் இருதயத்துக்குப் பலம் தரக்கூடியனவாகவும் இருத்தல்வேண்டும். சிலருக்கு மலச்சிக்கலினுல் சுரமுண்டாயிருக்கும்பட்சத்தில் மலம் தள்ளக்கூடிய ஔடதத்தாலேயே சுரம்நீங்கிவிட்டாலும் இருதயத்துக்குப் பலதரம் ஔடதம் அவசியம் கொடுத்தல்வேண்டும். சிற்சில சுரங்கள் நீங்குவதற்கு காலம் வேண்டியுமிருக்கின்றது. அதாவது கபவாதசுரம் (நிமோனியா) என்னும் வியாதிக்கு 7-நாள். அவற்றிலும் மேல்நாட்டார் சொல்வதுபோல்(டபுல்நிமோனியா) என்னும் கபவாதசுரத்துக்கு 14-நாள் சிகிச்சைசெய்துவரல்வேண்டும். சன்னி பாதசுரம் (டைபாயிட்) என்பவற்றிற்கு 22-நாள் சிகிச்சைசெய்யவேண்டும். கபவாத சுரங்களுக்கு சாதாரணமாய் தற்காலத்தில் மேல்நாட்டார் வகைப்படி மாரில் கபத்தை இளகச்செய்ய ஆண்டி பிளோஜிஸ்டின் அல்லது ஆளிவிரைமாவைப் பத்து போடுவதுடன், உள்ளுக்கு

அமோனியா கார்ப்	$\frac{1}{2}$–குண்டுமணி
லைக்கர் அமோனியா அசிடஸ்	5–துளி
ஸ்பிரிட்ஸ் ஈதர் நைட்ரஸ்	30–துளி
டிஞ்சர்டிஜிடலிஸ்	5–துளி
பொடாஷ் நைட்ரஸ்	$2\frac{1}{2}$–குண்டுமணி
சலம்	1–சங்கு

இவைகளை 1-வேளைக்கு கொடுக்கின்றுர்கள். இதை நாள் ஒன்றுக்கு 3-தரம் அல்லது 4-தரம் உபயோகிப்பதுவழக்கம். சிலர் இவைகளுடன் கிரியசோடால் என்னும் தைலத்தை 2-துளி ஒவ்வொரு தடவையும் சேர்த்துக்கொடுக்கின்றுர்கள். இவற்றுலும் சுரம்நீங்கி சுகமடைகின்றுர்கள்.

ஜெர்மெனிதேசத்தில் ஒருவித சிகிச்சைசெய்து வருகின்றுர்கள். அவை இத்தேசங்களிலும் தற்காலத்தில் பரவியிருக்கின்றன. அவையாவையெனின் மேற்சொன்ன கபவாதசுரங்களுக்கு எப்சம்பாத்என்று ஒருசிகிச்சை. அதாவது 1-பலம் இந்துப்பை $\frac{1}{2}$-படி சலத்தில்போட்டுக்காய்ச்சி ஒரு பிளானல் துணியால் நனைத்து சூட்டுடன் பொறுக்கக்கூடியவளவில் மார்மேல் வைத்து வைத்து எடுப்பது, அதாவது (ஒத்தடம்). இப்படி 4-மணிநேரம் ஒத்தடம் போட்டால் இதற்கு ஒருபாத்து என்று சொல்லுவதுண்டு.

மறுபடியும் கால்மணியோ அல்லது அரைமணியோ பொறுத்து மறுபடியும் முன்போல ஒத்தடம்போடுதல். இப்படி 26-தரம் ஒத்தடம்போட்டால், 7–நாள் 14-நாள் சிகிச்சைசெய்யவேண்டிய (சிங்கில்நிமோனியா)(டபுல்நிமோ

னியா) இவைகளெல்லாம் 3-நாளில் நீங்கிவிடுகின்றன. ஆயுள்வேதமுறைப் படி பலவித சிகிச்சைகளும் செய்துவருகின்றார்கள். அவற்றுள் பெரும்பான் மையும் செய்துவரும் சிகிச்சைகளில் சிலமுக்கியமான ஔடதங்களில் ஒன்றைமாத்திரம் இங்குச்சொல்லலாம். ஆடாதோடாஎன்னும் இலையின் இர சம் சுமார் இரண்டுபடி எடுத்துக்கொண்டு அவற்றில் அரிசி திப்பிலி ½-பலம் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்துப்போட்டு சுண்டக்காய்ச்சி உலர்த்தி சூர்ணம்செய்து வைத்துக்கொண்டு ஒருசிட்டிக்கைவிகிதம் காலைமாலைகளில் கொடுத்துவருகின்றார்கள், இதுபெரும்பான்மையும் உயர்ந்த மருந்து என்றே சொல்லலாம். ஏனெனில் முன்சொல்லிய முறைப்படி மேல்நாட்டுச் சிகிச்சை செய்வதில் சிலகாலத்தில் நிமோனியாவந்தபுருஷருக்கு பிரான்கைஸ் என்னும் ஈளை இருமல் உண்டாகி நாளடைவில் காமரோகம் உண்டாகக் காண்கின் றோம். இவற்றின் விஷயம் விவரிக்கில் விஸ்தாரமாய்விடும். ஆதலால் இதோடு நிறுத்தி எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பூர்த்திசெய்து பின்னால் இதனை விவரிக்கலாம். கடைசியாய் மேற்சொன்ன சிகிச்சையில் வியாதியைக் குணம் செய்தாலும் பின்னால் வேறுவியாதியுண்டாவதினால் சுவாசக்குழாயில் உண் டாகும் இரணம் மேல்நாட்டு சிகிச்சைகளால் அத்தியந்தம் நிவர்த்தியில்லை யென்றேகூறலாம். மூன்றாவது சொன்ன சிகிச்சை யப்படிக் கில்லாம லிருப்பதால் விசேஷமெனச் சொல்லலாம்.

(இன்னும்வரும்)

ஜனன ரகசியம்

(80-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்வுலகத்தில் தேகத்தை விட்ட ஆன்மா முன்னடி பாபத்தை யனுப விக்கக் கீழ் ஜன்மங்களுக்குச் செல்கிறதென்றும், அல்லது புண்ணியபலனை யனுபவிக்க மேல் ஜன்மங்களுக்குச் செல்கிறதென்றும் நாம் உணரமுடியாது. தேகமின்றேல் ஆன்மாவை நன்மை தீமைகளை யனுபவிக்கும்படி செய்ய ஒருவராலும் ஆகாது. ஏனெனில் ஆன்மா அழிவற்றது. நெருப்பில் வேகாது, ஜலத்தில் நனையாது, காற்றில் சலியாது, எந்த ஆயுதங்களாலும் சேதிக்கக் கூடாதது. சட்சுவாதி இந்திரியங்களால் உணரக்கூடாதது. மனதால் சிந் திக்கக் கூடாதது. (பகவத்கீதை சாங்கியயோக அத்தியாயம்). ஆகையால் பகவான் ஒரு தேகத்தை யளித்தே ஆன்மாவிற்கு வினைப்பயனை யூட்டவேண் டும். அதுபற்றி ஆன்மா ஒரு தேகத்தைப் பற்றியே, இருக்கும் தேகத்தை விடுகின்றது. அது முன்பாகத்தால் பூமியைப் பற்றியபிறகே பின்பாகத் தால் முன்பற்றியிருந்த பூமியின் பாகத்தை விடும் ஒரு புழுப்போல் என்று பாகவதம் தசமஸ்கந்தம் முதல் அத்தியாயத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஆன்மா இத்தேகத்தை விட்டவுடனே சேரும் தேகத்திற்கு யாதனா சரீரம் என்று நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. மேற்கூறியபடி ஆன்மா பாபத்தையும் புண்ணியத்தையும் ஒன்றன்பின் ஒன்றாயனுபவிக்கின் றது. இந்த இரண்டு ஜன்மங்களிலும் ஆன்மா அனுபவிப்பது மட்டுமே யன்றி வேறு கர்மங்களைச் செய்வதில்லை. இவை யிரண்டும் அனுபவித்தபின் பாபம் புண்ணியம் இரண்டும் கலந்த மிசிரமகன்மம் மட்டுமே பாக்கி யிருக் கிறது. இதை யனுபவிப்பதற்கே மறுபடி இவ்வுலகில் மானிடப்பிறவிக்கு வரவேண்டும். அவ்வாறு பாப புண்ணியங்களை யனுபவித்து, பிறகு இந்த மிசிரமகன்ம பூமியில் ஜன்மிக்க எத்தனை காலம் செல்லுமென்று வரை

யறுத்துக் கூறமுடியாது. 400—500 வருடங்கள் வரையில் சென்றாலும் செல்லலாம்.

இச்சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயம் நாம் நினைப்பில் வைத்திருக்க வேண்டும். அதாவது ஆன்மா இப்பூமியில் தேகத்தை விட்டுச் செல்லும் போது தொடங்கி, அது மறுபடி இங்குவந்து ஜனிக்குமட்டும் இவ்வுலகிற்கும் அந்த ஆன்மாவிற்கும் ஒருவித சம்பந்தம் இருந்துகொண்டே யிருக்கிறது. அது கண்களுக்குப் புலப்படாத ஒரு கம்பிபோன்றது. அக்கம்பியின் ஒரு முனை இவ்வுலகையும் மற்றொரு முனை ஆன்மாவையும் விடாமல் பற்றிக் கொண்டிருக்கிறது. ஆன்மா புண்ணிய ஜன்மம், பாப ஜன்மங்களை யனுபவிக்கும்போதும் இக்கம்பி யதை விடாமலே பற்றிக்கொண்டிருக்கும். இது ஆவரண சக்தியின் தொழில்.

மேற் கூறப்பட்டபடி ஆன்மா புண்ணியத்தையும், பாபத்தையும் கீழான பிறவிகளிலும் மேலானபிறவிகளிலும் அனுபவித்தபின் மிசிரமகன்மமே இன்னும் பாக்கியாய் அனுபவிக்கவேண்டிய திருக்கிறது. இப்போது ஆன்மா அந்த மிசிரம கன்மத்தோடு சந்திரமண்டலத்தில் கொண்டுவந்து வைக்கப்படுகிறது. அதன்பிறகு ஆன்மா மட்டும் சந்திரமண்டலத்தில் வைக்கப்பட, அது அனுபவிக்கவேண்டிய மிசிரமகன்மம் மட்டும் ஜலரூபமாய், மழை அல்லது பனித்துளியாய், பூமியில் இறங்கி மனிதர் புசிக்கும் ஆகாரம், ஔடதம் அல்லது ஜலத்தின் மூலமாய், அந்த ஆன்மா யாருடைய புத்திரனாய்ச் ஜனிக்கவேண்டுமோ அந்த புருடனுடைய தேகத்தில் பிரவேசித்து உதிரமாய்ப் பின் சுக்கிலமாய்மாறி இரண்டுமாதம் கழிந்து தாயின் கர்ப்பத்தில்சேர்ந்து, அந்த ஆன்மா செய்துள்ள கன்மத்திற்குத் தக்கவிதமான தேகமாய்ச் சிருட்டிக்கப் படுகிறது. அந்த ஆன்மா முன் இவ்வுலகில் தேகத்தைவிட்டு நீங்கும்போது யாரிடத்தில் தனக்குப் பாசம் அதிகமாயிருந்ததோ அவர்கள் கர்ப்பத்திலேயே ஜன்மிக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

“ வினைப்போகமே யொருதேகங்கண்டாய்—வினைதா னொழிந்தால் தினைப்போதளவு நில்லாதுகண்டாய்...” என்று முற்றத்துறந்த முழுஞானியாகிய நமது பட்டினத்தடிகள் அருளியபடி வினைப்போகமே தேகமாதலால் ஆன்மாவின் மிசிரகன்மமாகிய வினையே ஒருதேகமா யமைகிறது. வினையின்படி அத்தேகம் ஆண் உருவாகவோ, பெண்ணுருவாகவோ, அழகாகவோ, குரூபியாகவோ அமையும். அத்தேகம் சகல அவையவங்களும் அமையப்பெற்று முடிந்தபின் ஆன்மா அத்தேகமாகிய வீட்டில் கொண்டு வந்து வைக்கப்படுகிறது. எவ்வாறெனின், முன் இவ்வுலகிற்கும் ஆன்மாவிற்கும் சம்பந்தமாயிருந்த நாம்கூறிய கம்பி இப்போது தாயின் கர்ப்பத்திலிருக்கும் பிண்டமாகிய தேகத்திற்கும் சந்திரமண்டலத்திலுள்ள ஆன்மாவிற்கும் இடையில் சம்பந்தப்பட்ட கம்பியாயிருக்கிறது. ஆன்மா அத்தேகத்தில் பிரவேசிக்கும் காலம் தாய்க்குத் தன்னையறியாத சுழுத்தியுண்டாகிறது. அச்சமயம் சர்வவல்லமையுடைய ஆண்டவன் சக்தியால் சந்திரமண்டலத்திலுள்ள ஆன்மா முன்கூறப்பட்ட கம்பியின்வழியாய் இழுக்கப்பட்டு, சிசுவின் கபாலத்தின் உச்சியிலுள்ள துவாரத்தின்வழியாய் சிரசிலுள்ள சுழிமுனை என்ற விடத்தில் வைக்கப்படுகிறது. உடனே உச்சியின் மேலுள்ள சர்மத்தால் கபாலத்துவாரம் மூடப்படுகிறது. *சுழிமுனையென்ற மாடத்தில்

---

*சுழிமுனை:—சிரசில் இரண்டுபுருவங்களுக்கும் மத்திய ஸ்தானத்திலிருந்து பின்புறம் வெளிவரும்படி ஒரு கம்பியைச் சொருகுவதாய் வைத்துக்

வைக்கப்பட்ட ஆன்மாவென்னும் தீபம் தேகமாகிய வீடுமுழுதும் பிர காசித்துக்கொண்டிருக்கிறது.

அவ்வாறு தேகத்தில் பிரவேசித்த ஆன்மாவிற்கு கர்ப்பத்தைவிட்டு வெளிப்படும் வரையில் திரிகாலஞானமும் உண்டென்று கூறப்படுகிறது. அதாவது தான் முன் பலஜன்மங்களெடுத்து அலைப்புண்டதும், இப்போது மறுபடி கருக்குழியில் உருவம் பெற்றிருப்பதும், இச்சென்மத்தில் அனுபவிக் கப்போகும் நன்மைதீமைகளும் தெரியும். கர்ப்பத்திலிருக்கையில் பஞ்சபூதங் களாலாய *ஐந்துவித துன்பங்களும் சிசு அனுபவிக்கும்.

இத்தகைய துன்பங்களால் ஆன்மா பகவானைச்சிந்தித்து "ஆண்டவனே இனிநான் ஒருகர்மத்தையும் செய்யேன். பிராரப்தத்தைமட்டும் அனுபவித்து விட்டு 'பிறப்பற்ற மோட்சவீட்டை யடைவேன்" என்று உறுதி செய்து கொண்டு அதே சிந்தனையி லிருக்கும்.

பிறகு பிரசவகாலம் நெருங்கியபோது நீர்வற்றிய குட்டையிலுள்ள மச் சத்தைப்போல் தத்தளித்து பிறகு கர்ப்பத்திலிருந்து தனஞ்சயன் என்ற வாயுவினால் வெளியில் தள்ளப்படும்போது தட்டானுடைய கம்பியச்சில் இழுக்கப்பட்ட கம்பிபோல் நெருக்கமானவழியில் வருவதால் நசுக்குண்டு ஆவிசோர்ந்து மூர்ச்சையடைந்து பூமியில் வந்துசேர்கிறது. அந்த மூர்ச்சை யால் தான் கொண்டிருந்த நாட்டத்தின்விவரம் மறந்துபோக, வெளிவாயு தேகத்தில் பிரவேசித்து உசுவாசநிசுவாசம் உண்டாகி ஸ்மரணைவந்ததே ஏதோ நினைத்திருந்து மறந்துவிட்டதற்காக அழத்தொடங்குகிறது. அழுத ஆயா சத்தால் அஞ்ஞானமாகிய சுழுத்தி வந்துவிடுகிறது. அதோடு தான் கொண்ட நாட்டத்தை யடியோடு மறந்துபோகிறது. முன்ஜென்மத்தில் இறக்கும் போதுண்டான மூர்ச்சையால் அச்சென்மசங்கதியை யடியோடுமறந்து விட் டது.

ஆகையால் இப்போது யாவும் புதிதாகவும் அபூர்வமாகவும் தோன்று கிறது. முதலில் ஸ்பரிச உணர்ச்சிமட்டுமேயுண்டு. பிறகு பார்வை, சத்தம் ரசம் கந்தம் ஒவ்வொன்றாயுண்டாகி, கரணங்கள், குணங்கள் யாவும்சேர்ந்து பிராரப்தத்தை யனுபவிப்பதோடிராமல் மறுபடி கன்மத்தைச் செய்யத் தொடங்கிவிடுவதால் பின்னும் பிறவிக்கு வழியுண்டாக்கிக் கொள்கிறது.

(தொடரும்)

கொள்வோம். செவிகளில் ஒன்றின் மேல்பக்கஓரம் மையஸ்தானத்தி லிருந்து மறுபக்கச்செவியின் மேல்ஓர மையஸ்தானதில்படும்படி இன்னொரு கம்பி சொருகுவோம். நேராய்ச்சொருகப்பட்ட இந்த இரண்டு கம்பிகளும் சிரசின் உள்ளே ஒரு இடத்தில் சந்திக்குமல்லவா ? அந்தவிடமே சுழிமுனையிருக்கு மிடம்.

*(1) பிருதிவி = கருப்பப்பையில் தேகம் தாக்கும்போது அந்த உறுத்து தலால் புண்ணின்மேல் முட்கள்பட்டதுபோல் துன்பமாயிருக்கும்—(2) அப்பு = அங்குள்ள ஜலத்தில் மிதப்பது அகண்டசமுத்திரத்தில் தத்தளிப்பது போலிருக்கும்—(3) தேயு = அங்குள்ள உஷ்ணம் தேகத்தில்தாக்கும்—(4) வாயு = அங்குள்ள வாயுவினால் அலைகடலில் புயற்காற்றில் தத்தளிக்கும் கப் பல்போல் அலைக்கப்பட்டு துன்புறும்—(5) ஆகாயம். கருப்பப்பையிலுள்ள ஜலத்தைவிட்டு ஒவ்வொரு சமயம் நீங்கும்போது அந்தரத்தில் ஆதாரமின்றி இருப்பதுபோல் கிலேசமுறும்.

முயற்சி.

நாம் மேற்கொண்டியற்றப் புகுந்த ஓர் தொழிலை மனந்தளராது, என்ன கஷ்ட நஷ்டங்கள் எதிர்பாராது வரினும், பொறுமையுடன் செய்து முடிப்பதற்குத்தான் முயற்சி எனப்படும்.

முயற்சி, மனோ முயற்சி தேகமுயற்சி என இருவகைப்படும். நிகழ்வது பெரும்பாலும் மனோ முயற்சியே. ஆயினும் தேகமுயற்சியின்றி மனோமுயற்சி செய்வது அரிதினும் அரிது. தேகம் சௌக்கியமாயிருந்தாலன்றி மனோ முயற்சி நிறைவேறா. ஓராசிரியர் தாமெழுதும் புத்தகத்தில் அளவிடற்கரிய அருமை வாய்ந்த பெரும் விஷயங்களை நிறப்புதற்கேற்ற மனோசக்தி யுள்ளாரேனும் அவர் தேகமுயற்சி செய்து சௌக்கியமா யிருந்தாலன்றி அவ்வரிய விஷயங்கள் அவர்பாலெங்ஙன முதிக்கும்? முதன் முதலில் தமது தேக நிலையைச் சீர்படுத்தலவசியம். நிற்க,

உலகின்கண் எவ்வித நற்செய்கைகளைச் செய்யப்புகினும், அநேக இடையூறுகள் நேரிடுவது இயற்கையே. இவ்வாறு இடையூறுகளால் மனந்தளர நேரிடுங்கால், நாம் தொடுத்த கருமத்தை (இப்பொழுது) கைநழுவ்விடின், இதுவரையில் செய்த முயற்சி வீணாகப் பலனின்றிப் பாழாகப் போகின்றதுவே எனக் கருதி, ஊக்கத்தைப்பெருக்கிக் கருமத்தைக் கண்டிப்பாய்ச் செய்தே தீரவேண்டும்.

பெரும்பாலர் மனத்திடமின்றிக் கருமங்களைச சரிவர நிறைவேற்றாமலும், தங்களுக்கும் யாதொரு பிரயோஜனமின்றி விட்டு விடுகின்றனர். சிலர் முயற்சி செய்யும் மார்க்கங்களை அறிந்திருந்தும் அவைகளைத் தம் அனுபவத்திற்குக் கொண்டுவரா தொழிக்கின்றனர். இவர்கள் தங்கள் சாமர்த்தியங்களைத் தாங்களே குறைவாகக் கருதி, நற்செய்கைகளைச் செய்து பலனடைய முன்னுக்குவராமல் மூலையைத் தேடுகின்றனர். மற்றுஞ் சிலர் விதிப்பயனென்றும் அதிஷ்டமிருப்பின் யாவும் வந்து சேருமென்றும் வீணாகக் கருதித் தங்களுக்குப் புத்திகூர்மை எவ்வள விருப்பினும், உழைப்போடு கூடிய முயற்சியில்லாது வறுமை யடைகின்றனர். இதற்கு நேரிடையாக மந்தபுத்தியெனக் கருதப்படுவோர் தங்கள் விடாமுயற்சியினால் முன் கூறியவர்களால் அசாத்திய மெனக் கருதப்பட்ட கருமங்களைச் செய்து (ஆமையும் முயலும் என்ற கதையில்) ஆமையைப்போலும், கம்பராமாயணத்தை அரங்கேற்றுதற்கலைந்து வருந்திய கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பனைப்போலும், (காக்கையும் குடமும் என்றகதையில்) காக்கையைப்போலும் கீர்த்திபெறுகின்றார்கள்.

விதியை மதியால் வெல்லலாமெனக் கூறுவதை மெய்ப்பிக்கின்றனர் நமது குமரகுருபர சுவாமிகளும்.—

" உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே—உலகறியப்

பான்முளை தின்று மறலியுயிர் குடித்த
கான்முளையே போலுங் கரி."

என்றபடி, பதினாறு வயதில் இருக்கும்படியான ஏற்பாட்டோடு பிறந்த மார்க்கண்டேயர் தமது முயற்சியால் சிவனருளைப் பெறத் தக்க தவஞ்செய்து என்றும் பதினாறு வயதாயிருக்குமாறு வரம் பெற்றிருக்கிறார் என்பது யாவருமறிந்ததே. மற்றும்,

துருவர் விடாமுயற்சியால் பகவத் தரிசனம் பெற்றதும், விசுவாமித்திரர் பிராஹ்மண்யம் சம்பாதித்ததும் இவ்விடாமுயற்சியாலன்றோ? இதுபற்றியல்லவா நந்தெய்வப்புலமைத்திருவள்ளுவனாரும்,

" தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன்
மெய் வருந்தக் கூலி தரும்"

எனத்திருவாய் மலர்ந்தருளினர். ஆதலால் நாம் ஒவ்வொருவரும் முயற்சியுடையோராக இருப்போமாக.

வியாதி மூலங்கள்.

உலகத்தில் பொதுவாக எல்லாச் சீவராசிகளுக்கும் சரீர சௌக்கியத்துக்கு மேற்பட்ட சுகம் வேறொன்று மில்லை. முக்கியமாக மானிட ஜாதிக்குச் சரீர சௌக்கியத்தோடு கூடியிருந்தால் தான் ஐம்பொறிகளாலும் அறிந்து அனுபவிக்கத்தக்க இம்மை (இவ்வுலக) இன்பங்களை மனோரம்மியமாக அநுபவித்துச் சுகமடையவும், மறுமைக்குவேண்டிய சத்காரியங்களை நடத்திக்கொள்ளவும் முடியும் சரீர சௌக்கியம் தப்பினால் போகமும் சித்தியாகாது, யோகமும் சித்தியாகாது. இப்படி இக பரப் பிரயோஜனங்களை அடைதற்கு இன்றியமையாததா யிருக்கும் சரீரசௌக்கியத்தை நாம் எவ்விதத்தினுங் காப்பாற்ற வேண்டியது ஆவசிய மாகின்றது.

வியாதிகள் வந்தால் சரீரசௌக்கியங் குறையும். குறைந்தால் உலக போகங்களை இஷ்டப்படி யநுபவித்துச் சுகமடைய முடியாது. அப்படியே பரத்துக்கு வேண்டிய சற்சாதனங்களும் கைகூடா. அன்றியும், சரீர சௌக்கியங் குறையக் குறைய ஆயுசுங் குறைந்து கொண்டேவரும் என்பது நிச்சயம். ஆதலால், எல்லா விதங்களாலும் வியாதிகளை விலக்கவேண்டியதே நம்முடைய கடமையாய் முடிகின்றது. வியாதியை வரவழைத்துக்கொண்டு, பிற்பாடு அதற்குச் சிகிச்சைதேடுவது விவேகமாகாது. வியாதிகள் அணுகாமல் தடுத்தல் தான் விவேகம். இந்த உண்மையை வெளிப்படுத்தவே "நோய்க் கிடங்கொடேல்" என்று தருமத்தை விளக்க அவதரித்தவராகிய ஔவையார், யாவருமறியத்தக்க சுலபமான பாஷையில் நமக்குப் போதித்திருக்கின்றார். இவ்வாக்கியத்தின் கருத்தை அறியாத ஜனங்கள், நோய் வந்தபின்பு அதற்குப் படுத்து இடங்கொடாமல் உலாவித்

திரியவேண்டுமென்று அநர்த்தம் செய்து, அற்பவியாதியைப் பெரிய வியாதியாக்கிப் பலப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இது மகா பிசகான காரியம். நோய் வந்தகாலத்தில், காற்று பலமாய் வீசாதவிடத்தில், தனக்கு எப்படியிருந்தால் தேகத்துக்குச் சுகமாயிருக்குமோ அப்படி படுத்தோ, அல்லது உட்கார்ந்தோ, சௌகரியம்போ லிருத்தலே வியாதி பலப்படாமலிருத்தற்குத்தக்க உபாயமாகும். மேலே சொன்ன ஔவையாரது வாக்கியத்துக்கு, நோய் வருவதற்கு இடங் கொடாமல் தடுக்க வேண்டும் என்பதே சரியான தாற்பரியம்.

இனி வியாதிகள் வாராமல் தடுக்க வேண்டுமானால், வியாதிகளின் மூலம், அதாவது காரணங்களை யறிந்தாலொழிய, வியாதிகளைத்தடுக்க முடியாது. மிருக பக்ஷிகளுக்குக் காலபேதங்களால் வரும் அதி சீதோஷ்ணங்களின் கடூரங்களை விலக்கிக்கொள்ளும் கருவிகள் இயற்கையிலேயே யமைக்கப்பட்டிருப்பது மல்லாமல், தேகசௌக்கியத்துக்கான இடங்களையும், காலத்தையும், உணவையுந் தேடிக் கொள்ள ஓர் விதவுணர்ச்சியும், அவைகளுக்கு ஜன்மத்திலேயேயமைக் கப்பட்டிருக்கிறது. ஆகையினால்தான் மிருகபக்ஷிகள் பெரும்பாலும்வியாதிகள் அடையாமல் சௌக்கியமாகவே காலங்கழிக்கின்றன. மனிதருக்கோவெனில், மிருதுவான சரீரத்தைக் கொடுத்து, அதில் பகுத்தறிவு ஒன்றும் வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுத்தறிவைக்கொண்டு நாம் சுகந் தேடிக்கொள்ள வேண்டுமென்பது இயற்கைத் தருமத்தின் நோக்கம்.

நம் தேயத்து ஜனங்களுக்கு, புசிக்கும் பதார்த்தங்களினாலும், குடிக்கும் பதார்த்தங்களினாலு மாத்திரம் தான் வியாதிகள் வருமென்னும் ஞானம் சாதாரணமாயிருக்குமே யொழிய, வேறுவழிகளாலும் வியாதிகள் வரக்கூடுமென்னும் ஞானம் அற்பமுங் கிடையாது. தேகத்துக்கு ஒவ்வாத பதார்த்தங்களை யுண்பதனாலும், ஒவ்வின பதார்த்தங்களையும் அளவுக்கு அதிகமாயும் அகாலங்களிலும் உண்பதனாலும் வியாதிகள்வரும் என்பதை யாம் இல்லையென்று சொல்லவில்லை. அப்படியே, புறம்பில் ஆகாய வெளியிலுள்ள சீதோஷ்ணங்களாலும், மோதிவீசும் காற்றினாலும், விஷவாயுக்கள் கலந்த ஆகாயத்தை உட் சுவாசிப்பதனாலுங்கூட வியாதிகள் வரும் என்பதை நம்மவர்கள் உறுதியாய் நம்ப வேண்டும். காற்றானது தேக சௌக்கியத்துக்கென்றே ஏற்பட்டுள்ள முக்கிய பூதமாயிருந்த போதிலும், அதிகப்பட்டால் அதுவுந் துன்பஞ்செய்யுமென்பதே யுண்மை. ஆதலால் 'வெற்றுடம்போடு' [தக்க போர்வையில்லாமல்] நெடுநேரம் குளிரிலிருப்பதும், நெடுநேரம் உஷ்ணத்திலிருப்பதும், நெடுநேரம் மோதிவீசுங் காற்றிலிருப்பதும், துர்நாற்ற மலிந்தவிடங்களில் இருப்பதும் ஆகிய இவைமிகுந்த கொடிய வழக்கங்களாம். இவ்வழக்கமானது கர்ப்பத்திலேயே பதிந்துள்ள வியாதிகளைக் கிளறி யெழுப்புவது மல்லாமல் நூதன வியாதிகளையும் உண்டு பண்

ணிப் பெருந்தீங்குக்கிடஞ்செய்யும். இவ்வுண்மையறியாமல் எத்தனையோபேர் குளிர் முதலிய காலபேதங்களுண்டாகும்போது வியாதிப்பட்டு மடிகிறார்கள். (தொடரும்)

கற்கோட்டை

(38–ம் பக்கத் தொடர்ச்சி.)

கற்கோட்டை ஒரு பெரிய கட்டிடம். அதன் முன் பக்கம் உயர்ந்த ஒரு கோபுரமுண்டு. விசாலமான அறைகளும், கூடங்களும், பெரிய கிடங்குகளும் அக்கட்டிடத்தில் ஏராளமாயிருக்கின்றன. பெரும்பாலான சுவர்கள் சித்திர வேலைசெய்த மரப்பலகைகளால் மூடப்பட்டிருந்தன. புராதன கட்டிடமாகையால் அதில் கள்ள அறைகளும் உண்டு. கட்டிடம் இரண்டடுக்குமாடி. அதைச் சேர்ந்த விஸ்தீரணமான தோட்டத்தில் பலவகையான நறுமணம் வீசும் மலர் விருக்ஷங்களும், இனிய கனிகளைத்தரும் விருக்ஷங்களும் அவைகளினிடையில் உல்லாசமாயுலாவுவதற்காகச் செப்பனிடப்பட்ட சிறுபாதைகளும் உண்டு. திரண்ட செல்வமுடைய குடும்பம் வசிப்பதற்கு அது நேர்த்தியான இடமே.

இராஜாத்தி தன் பரிவாரத்தோடு விஜயம் செய்திருக்கிறாள் என்ற சங்கதி தெரிந்ததே, மாளிகை முழுதும் கிளர்ச்சியுண்டாயிற்று. அதன் சொந்தக்காரராகிய செல்வராயர் வாயிற்படியண்டைசென்று முறைப்படி தன் அரசிமுன் முழங்காற்படியிட்டு வணங்கி மரியாதையோடும் விசுவாசத்தோடும் நல்வரவுகூறி, யாவரையும் உள்ளே அழைத்துச்சென்றார். வேலைக்காரர் ஓடிவந்து குதிரைகளையெல்லாம் கொண்டுபோய் இலாயங்களில் சேர்த்து அவற்றின் ஆகாரத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

செல்வராயர் இராணியை யழைத்துக்கொண்டுபோய் ஓர் அலங்காரமான கூடத்தில், தந்தத்தினால் அழகாய்ப் பொன்வேலைசெய்யப்பட்டு, பொற்சரிகையால் விசித்திரமான வேலைகள் செய்யப்பட்ட மொகம்மல்பட்டு மெத்தை போடப்பட்டிருக்கும் ஆசனத்தில் அமர்த்தி, "மகாராணி அவர்கள் இவ்வேழையின் குடிசைக்கு விஜயம்செய்ததால் அடியேன் மிக்க பாக்கியம் பெற்றேன்" என்றார்.

இராணி புன்னகையோடு "ஓ செல்வராயரே! இதுவா குடிசை! என் அரண்மனையைவிட எவ்வளவோ அழகாயும் அலங்காரமுடையதாயுமிருக்கிறதே. என் குடிகளில் சிலர் என்னைப்போன்ற இராஜபோகத்திலிருப்பதைக் காண நான் எவ்வளவோ சந்தோஷமடைகிறேன். ஏன் உமது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவருமில்லையா?" என்றாள்.

செல்வராயர் சற்று முகவாட்டமடைந்து "ஹா மகாராணி! நான் துரதிஷ்டமுடையவன். என்மனைவி காலமாய்விட்டாள். எனக்கு ஒரேயொரு புத்திரிமட்டு மிருக்கிறாள். அவளுக்குப் பத்துவயதேயாகிறது" என்றார். இராணி ஆ! அப்படியா பரிதாபம்! துரதிஷ்டமும் துயரமும் யாரைத்தான் விட்டது. ஏக சக்கிராதிபதியாயிருக்கும் அரசனுக்கும் குடும்ப விஷயங்களில் துயரமில்லாமலில்லை. ஆ! இப்படிப்பட்ட தந்தைக்குப்பிறந்த புத்திரிமிக்க குணவதியாகவேயிருப்பாள். எதோ அவளையழைத்துவா பார்ப்போம்" என்றாள்.

செல்வராயர் உடனேசென்று சுமார் 50 வயதுடைய ஒரு மூதாட்டியையும், தன் புத்திரியையும் அழைத்துவந்து இராணியின் முன் நிறுத்தி,

"மகாராணியே! இதோ நிற்கும் இந்தம்மாள் என் சகோதரி. இவள் பெயர் தங்கம்மாள். இந்தம்மாள்தான் தாயற்ற என்புத்திரிக்குத் தாயாராயிருக்கிறாள்" என்று கூறினார். தங்கம்மாளும் கன்னிகையும் அரசியின்முன் பணிந்தார்கள்.

அரசி அக்கன்னிகையைத் தூக்கித் தன் அருகில் நிறுத்திக்கொண்டு, பளபளவென்று கறுத்து நீண்டு வளர்ந்திருக்கும் அவள் கூந்தலையும், பிரகாசம் பொருந்திய கண்களையும் மிக்க அழகுவாய்ந்த முகாரவிந்தத்தையும் கண்டு களிப்பெய்தி, வர்த்தகரை நோக்கி,

"செல்வராயரே! இத்தகைய புதல்வியை யடைதற்கு நீ நல்ல புண்ணியம் செய்திருக்கவேண்டும்" என்று கூறிவிட்டு, "இப்படிப்பட்ட அழகிய பெண்ணைப் பெற்றிருக்கும்போது—ஹா நான் நினைக்கிறேன்...ஆம், ஆம்" என்று மெதுவாய்க்கூறிக்கொண்டே, சற்று தூரத்தில் நின்றுகொண்டிருக்கும் சிறுவனைநோக்கி, "கண்ணு, இங்கேவா!" என்றாள். சிறுவன் உடனே மரியாதையாய் எதிரில்வந்து நின்றான். செல்வராயர் புத்ரி சற்று நாணத்தோடு இரண்டடி பின்னிடைந்தாள். இராணி, இங்கேவா குழந்தாய் என்று அவளை யருகிலழைத்து, வர்த்தகரைநோக்கி இவள் பெயரென்ன வென்றாள்.

வர்த்தகர்.—"மகாராணியவர்கள் ஞாபகார்த்தமாகக் கமலாம்பாள் என்று பெயரிட்டிருக்கிறேன். மன்னிக்கக்கோருகிறேன்" என்றார்.

இராணி.—"மன்னிக்கவா! என் உம்முடைய இராஜவிசுவாசத்திற்கு இதுவும் மற்றொரு அத்தாட்சியே." என்று கூறிவிட்டு,

"கமலாம்பா! இதோ பார் இவன் நாணயமான பெரியமனிதன். இவன் ......இருக்கட்டும், யாராயிருந்தாலும் இருக்கட்டும். இப்போது அதைப்பற்றி அக்கரையில்லை. சத்தியாய் இவன் பெயர் கண்ணன் என்றுமட்டும் தெரிந்துகொள். இருவரும் அறிமுகமாகித் தோட்டத்திற்சென்று விளையாடுங்கள். இருவரும் நல்லகூட்டாளிகளாய் விடுங்கள்" என்று கூறி கமலாம்பாளுக்கு முத்தமளித்து "கண்ணு! இந்தா அழைத்துக்கொண்டுபோ" வென்றாள். இராணியின் கட்டளைப்படிக்கே இரண்டு சிறுவர்களும் தோட்டத்திற்குச் சென்றார்கள். தங்கம்மாளும் இராஜசமுகத்தைவிட்டு சமயலறைக்குச் சென்று இராணிக்கும் மற்றவர்களுக்குந் தகுந்த ஆசாரவகைகளை ஆயத்தம் செய்யத்தொடங்கினாள்.

செல்வராயர் இராணியைநோக்கி "மகாராணியவர்கள் உல்லாசமாய்ச் சற்று தோட்டத்தில் உலவிவரப் பிரியமானால் அதற்குள் போசனம் ஆயத்தமாய்விடும்" என்றார். இராணி ஆகா. உமது அழகானதோட்டத்தைக் காண்பது நமக்கு மிக்க சந்தோஷமே, வாரும் செல்வோம்" என்றாள்.

உடனே வர்த்தகரும் இராணியும் முன்னாகவும் மற்றபேர் சற்று தூரமாகவும் உலவிக்கொண்டே தோட்டத்திற்குள் சென்றார்கள்.

இராணி செல்வராயரைநோக்கி "ஆ! உமது அழகிய கன்னிகையை அம்மூதாட்டியின் பார்வையிலா முழுதும் விட்டிருக்கிறீர்?" என்றாள்.

செல்வராயர்.—இல்லையில்லை. உபாத்தினியைப்போன்ற வேறொரு கன்னிகை யிருக்கிறாள்.

அரசி.—"ஏனெனில் உன்புதல்வி தாயற்றவள். அதனாலும் அவளுக்கு என் பெயரே யிடப்பட்டிருப்பதாலும் நான் அவள்மேல் விசேஷ அன்புள்ளவளா யிருக்கிறேன். இக்காலத்திய நாகரீகமான கல்விகளைப் போதிப்பதற்குத் தகுதியான உபாத்தினி யிருத்தல்வேண்டும். நீ கூறிய அக்கன்

னிகை யெப்படிப்பட்டவளென் றறிவதற்காக அவளையும் நான் காண வேண்டும் " என்றாள்.

வர்த்தகர் இரண்டொரு நிமிடங்கள் ஏதோ கலக்கமான சிந்தனையி லிருப்பவர்போல் மௌனமாயிருந்து, " ஆகா. அப்படியே அக்கன்னிகை தங்களை வந்து காணும்படி செய்கிறேன், அவள் சம்பளத்திற்கிருக்கும் உபாத்தினியல்ல—" வென்றார்.

அக்கன்னிகையைத் தன்முன்வரச்செய்ய வர்த்தகர் தடுமாற்றமடைவதாகவும், அவள் விஷயத்தில் ஏதோ மர்மம் இருப்பதுபோலவும் அரசியின் மனதிற் றோன்றியது. அவள் வர்த்தகரைநோக்கி,

" ஏன்! நான் முன்பே உமது குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் யாருமில்லையாவென்று கேட்டேனல்லவா? அரசி உமது மனைக்குவந்தால் குடும்பத்திலுள்ள அனைவரும்வந்து அவளுக்கு மரியாதை செய்யவேண்டியது முறைமையாயிருக்க, இங்கு நாமே ஒவ்வொருவரையும் அழைக்கவேண்டியிருப்பானேன்?" என்றாள்.

வர்த்தகர்.—மகாராணியவர்கள் கோபிக்காதிருக்க வேண்டிக்கொள்கிறேன். நான் உத்தேசமாய் அப்படிச்செய்யவில்லை. நான் கூறிய அக்கன்னிகை மிக்க கூச்சமும் நாணமுமுடையவள். மற்றபடி வேறொரு வித்தியாசமுமில்லை" யென்றார்.

இராணி " ஓகோகோ. அப்படியா அக்கூச்சம் நாளடைவில் போய்விடும். இன்று நீரும் நகரசங்கத்தைச்சேர்ந்த மற்றவர்கள் அந்த சேந்தன் இடத்தைப்பற்றி நமக்குச்செய்துகொண்ட மனுவைப் பார்வையிட்டோம். பொதுநலத்தைக்கருதி நீரே அதன் விலையில் மூன்றில் ஒருபங்கு உமது சொந்தப்பணத்திலிருந்து கொடுக்க உத்தேசித்திருப்பதையும் அறிந்தோம். அதன் விலையைக் கணிப்பதற்காக நாமே நேரில் பார்வையிடவே யிப்போது வந்தது. பார்வையிட்டு முடிந்தபிறகு உமது வாசஸ்தலம் அருகிலிருப்பதையறிந்து இங்குவந்தோம் " என்றாள்.

செல்வராயர்.—" அப்படிவந்ததால் நானும் என்குடும்பமும் மிக்க கௌரவமடைந்தோம். " என்றார்.

இராணி.—" உமது இராஜவிசுவாசத்திற்காக மிக்கமகிழ்வடைகிறோம். ஆகையால் அந்தமனுவை யங்கீகரித்து அம்மடத்தை நகரசங்கத்தாருக்குக் கொடுக்க தீர்மானித்திருக்கிறோம். ஆ—— இது எங்கிருந்து வருகிற சங்கீதத்தொனி " என்றாள்.

ஏனெனில் அச்சமயம் சற்று தூரத்திலிருந்து தாழ்ந்த இனியகுரலாய் இருவர் பாடும் சத்தம் இராணியின் செவியில்விழுந்தது. வர்த்தகர் இராணியைநோக்கி " அத்தொனி என்குமாரத்தியும், தங்களிடமிருக்கும் சிறுவனாகிய கண்ணன் என்பவனும் பாடும் சத்தம் " யென்றார். இராணியார் அப்படியா அவர்கள் எங்கே யிருக்கிறார்கள் என்றாள். வர்த்தகர் " இப்படிவாருங்கள் அவர்கள் உள்தோட்டத்திலிருக்கிறார்கள் " என்று கூறிக்கொண்டே அங்கிருந்த மதில்சுவரிலுள்ள சிறுகதவைத்திறந்து உள்ளே யழைத்துச் சென்றார். சற்றுதூரத்தில் சிறுவர்கள் இருவரும் ஒரு தாழ்ந்த ஆசனத்தில் உட்கார்ந்திருப்பது இவர்கள் கண்களுக்குப்புலப்பட்டது. தரையில் மிருதுவான புல் கனமாயிருத்தலாலும் இருவர் மனங்களும் தங்கள் சம்பாஷணையில் ஒன்றிலேயேநாட்டமாயிருந்ததாலும் இராணியும் வர்த்தகரும்வந்தது சிறுவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களும் சிறுவர்கள் அருகிற்செல்லாமல் தூரமாகவே மறையநின்றார்கள். அப்போது கீழ்க்கண்ட சம்பாஷணை அவர்கள் செவியில்விழுந்தது.

கண்ணன்.—மெய்யாகவே இராணியின்கூடச்செல்வது எனக்கு மிக்க சந்தோஷமான தொழில். நான்போவதற்குள் என்சிறிய கறுப்பு மட்டக் குதிரையை யுனக்குக்காட்டுகிறேன். நான் எப்படியாவது மறுபடி உன்னைவந்து காண்பேன்.

கமலாம்பாள்.—வருவாயென்றே நம்புகிறேன்.

கண்.—மெய்யாகவேவருவேன். எனக்கு உன்மேல் மிக்கபிரியம் உண்டாயிருக்கிறது. நான் தூரத்திலிருந்தாலும் உன்னை யடிக்கடி நினைக்காமலிருக்கமாட்டேன். நான் கொஞ்சம் பெரியவனானால் பெரும்பாலும் யுத்தத்திற்குப் போவேன். அப்போது நான் உன் உண்மை வீரனாயிருப்பேன். உன் அடையாளத்திற்காக உன்கைவிரல் சட்டைகளில் ஒன்றாவது, உன்கூந்தலில் கொஞ்சமாவது எனக்குக் கொடுக்கவேண்டும்.

கமலா.—ஆ ! யுத்தத்திற்குச்சென்றால் ஒருசமயம் மரணம் நேரிட்டாலும் நேரிடுமல்லவா ?

கண்.—ஆனால் சுத்தவீரனாயிருப்பவன் அவைகளுக்கெல்லாம் அஞ்சலாகாது.

அதற்குள் கமலாம்பாள் இராணியையும் தன்தந்தையையும் பார்த்துவிட்டு, "கண்ணா ! இராணியும் என்தந்தையும் அதோவந்து நிற்கிறார்கள். ஒருசமயம் நாம் பேசியதையெல்லாம் கேட்டிருந்தார்களோவென்னமோ" என்றாள். கண்ணன் "என்பிரியமுள்ள கமலா! நாம் அவர்கள் வந்திருப்பதைத் தெரிந்துகொள்ளாதுபோலவே யிருக்கவேண்டும். பேசாமலிரு, அவர்கள் என்னகூறிக் கொள்ளுகிறார்களோ கேட்போம்" என்றான்.

இராணியும் வர்த்தகரும் சிறுவர் சம்பாஷணையின் முதல்பாகத்தைக் கேட்டபோதே வர்த்தகர்மெதுவாய் "மகாராணியாரே! அவர்கள் என்னமோ பிணத்திக்கொண்டிருக்கிறார்கள்" என்றார். இராணியோ "பேசாமலிரு, முழுதும்கேட்போம்" என்றாள். அவ்வாறே யாவும்கேட்டபின், வர்த்தகர் இராணியைநோக்கி "பார்த்தீர்களா குழந்தைவிளையாட்டு, என்னென்னமோ உளருகிறார்கள்" என்றார்.

இராணி.—"குழந்தைவிளையாட்டா ! உளருகிறார்களா ! ஏன், முன்னுக்கு நடக்கப்போகிற அவர்களது வினைப்பயன் இப்போதே வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறது என்று கூறக்கூடாதோ?" என்றாள்.

வர்த்தகர்.—தாங்கள் கூறுவதென்ன. வேடிக்கையாய்த்தானே கூறுகிறீர்கள் ?

இராணி.—வேடிக்கையாகக்கூறலாம் தான். ஆனால் இச்சமயம் நான் வேடிக்கையாகக்கூறவில்லை. வினையே இப்போது இவர்கள் இருவரையும் சந்திக்கச்செய்தது. இருவர்க்கும் பரஸ்பர அன்புண்டாய்விட்டிருக்கிறது. காலக்ரமத்தில் அதுகாதலாய்மாறிவிடும். அவர்கள் புருடன் மனைவியாவதற்கே பிறந்திருக்கிறார்கள். என் மனதில் அது உண்மையென்று படுகிறது. உன்புதல்வி தாயற்றவளாதலால் அவள்மேல் எனக்கு அன்புண்டாயிருக்கிறது. அவளுடைய க்ஷேமாபிவிர்த்தியில் நான் நாட்டம் வைத்திருப்பேன். கண்ணபிரான் தாய்தந்தையில்லாதவன். இவன் தன் பெரியதந்தையாகிய பிரபுவின் ஆதரவிலிருக்கிறான். அந்தப்பிரபுவின்மேல் எனக்கு நல்ல அபிப்பிராயமாவது அன்பாவது கிடையாது. இவனை அப்பிரபுவிடம் விட்டுவைக்க எனக்குமனமில்லாமலே என்னிடம் வைத்துக்கொண்டிருக்கிறேன். இவனுடைய க்ஷேமாபிவிர்த்தியையும் நான் கவனித்து வரப்போகிறேன். இவ்வாறு இருவரும் என் அன்பிற்கு உரியவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் பிற்காலத்தில் புருட

னும் மனைவியுமாகப் போகிறார்கள் என்று என்மனதிற்பட்டவரையில் அது அவ்வாறே நிறைவேறுவதற்காக என்னால்கூடிய பிரயத்தனங்களை நான் செய்யாமலிரேன். இதன் உண்மை யுமக்குப் போகப்போக தெரியவரும்!" என்று பிடிவாதமாய்க் கூறினாள்.

இராஜாத்தியின் மொழிகளைக்கேட்ட செல்வராயர் திப்பிரமையடைந்தார். இராணி தான் பிடித்தபிடியைச் சாதித்தே தீரும்படி பிடிவாதகுணமுடையவளென்று வர்த்தகர்க்கு நன்றாய்த்தெரியும்.

"மகாராணி! இருவரும் மிக்க சிறுவயதுடையவர்கள். மேலும் கண்ணபிரானுடைய பிறப்புவளர்ப்பு எப்படியோ......" என்றார்.

இராணி.—சேசே! நான் அப்படி கூறியதனால் இப்போதே யெல்லாம் முடிந்துவிட்டதா? அதற்கு இன்னம்காலம் இருக்கிறது. கண்ணபிரான் பிரபுவம்சம். அவனுடைய பெரியதந்தை யிறந்ததே பிரபு பட்டமும் திரண்டசெல்வமும் அவனுக்குக்கிடைக்கும். தெரியுமா? அதைப்பற்றி உமக்குக் கவலைவேண்டாம். இனிநாம் வீட்டிற்குத் திரும்புவோம்," என்றாள். (தொடரும்)

பொது சமாசாரங்கள்

அறிதற்குரிய விஷயங்கள்.—காலால் ஒரு தாண்டு தாண்டினால் மூன்றடியாகும். ஒரு ஜாண் 11-அங்குலம். ஒரு கஜம் 2-முழம். உள்ளங்கை மூன்றங்குலம் அளவுள்ளது. உலகத்தில் இப்பொழுது சுமார் 1750 பாஷைகள் வழங்கிவருகின்றன. உலகமெங்கும் ஒரு விநாடி நேரத்தில் சுமார் மூன்றுபேர் இறக்கின்றனர். புயற்காற்று ஒரு மணி நேரத்தில் 36-மைல் தூரம் செல்லுகின்றது. ஒரு மைல் 1760 கஜம்.—ஒரு சதுரமயில் 640-ஏக்கராபூமிகொண்டது. சப்தம் ஒரு விநாடியில் 1118-அடி தூரம் செல்லும். மெல்லெனச் செல்லும் ஆற்றுநீர் மணிக்கு 4-மயில் தூரம் செல்லும். வேகமாய்ச் செல்லும் ஆறுகளின் நீர் மணிக்கு 7-மைல் தூரம் செல்லும். சண்டமாருதம் என்னும் பெருங்காற்று மணிக்கு 80-மைல் வீதம் வீசும். மந்தமாருதமோ மணிக்கு 7-மைல் வீசும். ஒளி ஒருவிநாடிக்கு 1,86,000-மைல் வீதம் செல்லுகிறது.

பம்பாயில் என். ஜே. காமாதியா என்ற பார்சி ஜாதிக் கோடீஸ்வரர் சில தினங்களுக்கு முன் காலஞ்சென்றார். அவர் இறந்த மூன்றாம்நாளன்று இரண்டுலட்சத்தி 82 ஆயிரரூபாய் தானத்திற்கென்று எடுத்துவைக்கப்பட்டதென்று தெரிகின்றது.

இங்கிலாந்திலே ஒருவன் 22 வருஷம் ராணுவசேவை செய்துவிட்டு இப்பொழுது பென்ஷன் பெற்று வருகிறான். இவனுக்கு வயது 67. மக்கள் 31-பேர். அவர்களில் 12-பேர் பெண்கள். பாக்கி 19-பேர் குமாரர்களில் 16-பேர் இப்பொழுது யுத்தத்தில் சண்டைசெய்து வருகின்றனர்.

ஆல் என்னும் பிரதேசத்து அரசர் தனது நாட்டில் ஓடுகிற ஆற்றில் மிதந்து சென்ற ஒரு முதலையைச் சுட்டுக்கொன்றார். அதன் நீளம் 18-அடி. அது நீண்டகாலமாக ஆற்றோரத்தில்வந்த மனிதர்களையும் கால்நடைகளையும் பிடித்துத் தின்றுகொண்டிருந்தது. இந்த முதலையின் வயிற்றைக் கிழித்துப் பார்த்ததில் அதில் 12-சேர் பித்தளை நகைகளும், 2 பொன் மூக்குத்திகளும் அகப்பட்டனவாம். இவை அது கொன்று தின்ற புருஷரும் ஸ்திரீகளும் அணிந்திருந்தவைபோலும்!

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

நளஹு புரட்டாசிமீ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,

பசலி 1325-26, கோல்லம் 1091-92,

இங்கிலீஷ் 1916-ம்ஹு செப்டம்பர்—அக்டோபர்மீ

செப்டம்பர்	புரட்டாசிமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
16	1	ச	பஞ்-42-23	பர-23-48	சித் 24 அ	மஹாபாணி
17	2	ஞா	சஷ்-44-17	*கார்-26-57	சித்த 60	கிருத்திகைவிரதம்
18	3	தி	சப்-47-10	ரோ-31-11	அமி 60	கன்னி புதுபாத்ரம் வாங்க
19	4	செ	அஷ்-52-29	மிரு-36-12	சித் 36 மர	எருதுகளை வாங்க
20	5	புத	நவ-56-2	திரு-42-39	சித்த 60	சூளையில் நெருப்புவைக்க
21	6	வி	தச-60-0	புன-48-52	அமி 60	புதுவியாபாரம் செய்ய
22	7	வெ	தச-1-8	பூச-55-16	மர 60	... ...
23	8	ச	ஏகா-6-0	ஆயி-60-0	மர-60	ஜெபம் பூர்த்திசெய்ய
24	9	ஞா	துவா-10-29	மக-60-0	மர-60	தனியநாள்
25	10	தி	திர-14-10	மக-6-25	மர 6 சி	சித்திரமெழுத
26	11	செ	சது-18-41	பூர-12-58	சித் 13 அ	மஹாளய அமாவர்சைவிர
27	12	புத	● அமா18-12	உத்-13-49	அமி 14மர	பூமுடிக்க [தம்
28	13	வி	பிர-18-21	அஸ்-14-47	சித்த 60	கிருஷிக்குப்போக
29	14	வெ	துதி-17-11	சித்-14-54	சித்த 60	7-க்குள் மழை
30	15	ச	திரி-14-58	சுவா-15-34	அமி 16 சி	புது பசுக்களை வாங்க
அக்டோபர்மீ 1	16	ஞா	சது-11-38	விசா-14-0	மர-60	கரிநாள்
2	17	தி	பஞ்-7-26	அநு-11-31	சித்த 60	சஷ்டி விரதம்
3	18	செ	சஷ்-2-25 சப்-54-33	கேட்-8-28	சித் 8 அ	ஆபரணமழித்துசெய்ய
4	19	புத	அஷ்-51-7	மூல-4-44	மர 5 அ	கடன்தீர்க்க
5	20	வி	நவ-46-12	பூரா-1-45 உத்-55-58	சித்த 60	ஸரஸ்வதி பூஜை
6	21	வெ	தச-39-47	திரு-52-35	மர 53 சி	விஜயதசமி
7	22	ச	ஏகா-33-41	அவி-48-48	சித் 49 அ	கன்றுகாலி கொள்ள
8	23	ஞா	து-24-31	சத-41-59	சித்த 60	6-க்குள் மழை
9	24	தி	திர-23-43	பூர-42-54	மர 43 சித்	தனியநாள்
10	25	செ	சது-19-57	உத்-39-42	அமி 40 சி	கரிநாள்
11	26	பு	○ பௌ16-59	ரேவ-40-14	மரண-60	கிரகப்பிரவேசம்
12	27	வி	பிர-15-46	அசு-40-45	அமி 41 சி	உபனயனம்
13	28	வெ	துதி-14-43	பர-42-32	சித்த 60	மூலிகைகள் உபயோகிக்க
14	29	ச	திரி-15-29	*கார்45-11	அமிர்-60	கிருத்திகைவிரதம்
15	30	ஞா	சது-17-30	ரோக-49-11	சித்த 60	
16	31	தி	பஞ்-20-57	மிரு-54-14	அமி-54 சி	உதயம் வெங்காயம் நட

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS